Free Copy

Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

யாழ் மக்களுக்காக... யாழ் மண்ணில்...




412, First Floor, Hospital Road, Jaffna.
(Adjoining Sangeetha Mobile Links)
Fly Line
Keerthan - 0773 916 416
Tharshy - 0773 915 530

முரசு – 01 திருவள்ளுவர் ஆண்டு 2041 மார்கழி 27 செவ்வாய்க்கிழமை (11.01.2011) பக்கங்கள் 12 ஓசை – 103

## வடக்கின் துரித அபிவிருத்தியில் முக்கிய நகரங்களுக்கு முன்னுரிமை

### நகர அபிவிருத்தி அதிகாரசபை துரித நடவடிக்கை



(கொழும்பு)

வடக்கின் முக்கிய நகரங்களின் துரித அபிவிருத்தியைக்கருத்தில் கொண்டு அந்த நகரங்கள் அனைத்தும் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் கீழ் கொண்டுவரப்பட்டிருக்கிறது. நகர அபிவிருத்தி அதிகார சபையின் நடவடிக்கைகள் தொடர்பான முன்னேற்ற அறிக்கை ஒன்று அண்மையில் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது.

இந்த முன்னேற்ற அறிக்கையிலேயே மேற்படி வடக்கின் முக்கிய நகரங்களையும் அபிவிருத்தி செய்ய வேண்டியதேவைகள் குறித்தும் அதன் அடிப்படையில் அவற்றையும் நகர அபிவிருத்தி (11ஆம் பக்கம் பார்க்க)

## வாகனங்களுக்கு வரிசெலுத்த மாத இறுதிவரை அவகாசம்

### அமைச்சர் டக்ளஸ் ஏற்பாடு



(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் 2011ஆம் வருடத்திற்கான வாகன வரிகளைச் செலுத்தி அதற்குரிய பற்றுச்சீட்டுக்களைப் பெறாதவர்களுக்கு எதிராக பொலிஸார் தற்போது நடவடிக்கை எடுத்து வருகின்றனர். இவ்விடயம் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா அவர்களது (11ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கை புலனாய்வு அதிகாரிகளுக்கு பாகிஸ்தானில் விசேட பயிற்சிகள்

### வலுவடையும் இரு தரப்பு உறவுகள்

(இஸ்லாமாபாத்)

**இலங்கையின் புலனாய்வாளர்களுக்கும், இரகசிய சேவை அலுவலர்களுக்கும் பாகிஸ்தான் அரசு சிறப்புப்பயிற்சிகளை வழங்குவதற்கு முன்வந்துள்ளது. இவ்வாறான சிறப்புப் பயிற்சிகளை வழங்குவதற்கு பாகிஸ்தான் அரசு தயாராக இருப்பதாக பாகிஸ்தான் ஜனாதிபதி ஆசிவ் அலிசர்தாரி நேற்று அறிவித்தார்.**

பாகிஸ்தானுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தலைமையி லான இலங்கை நாடாளுமன்ற தூதுக் குழுவினரை சந்தித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.



இரத்தினக்கல் வெட்டும் (12ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். குற்றச்செயல்களைத்தடுக்க பொலிஸ், இராணுவக் கூட்டு நடவடிக்கை

### இரவில் அநாவசிய நடமாட்டத்துக்குக் கட்டுப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் அதிகரித்துவரும் கொலை, கொள்ளை மற்றும் ஆட்கடத்தல் சம்பவங்களைக்கட்டுப்படுத்தும் முகமாக பொலிஸாரும், இராணுவத்தினரும் இணைந்து கூட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளனர். இதன் முதற்கட்டமாக இரவு பத்து மணிக்குப் பின்னர் வீதியில் எவரும் அநாவசியமாக நடமாட அனுமதிக்கப்படமாட்டார்கள் என்றும், இவ்வாறான புதிய விதி முறைகள் உடனடியாக அமுல்படுத்தப் (11ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். குடாவிற்கு திரும்பும் இடம்பெயர்ந்த முஸ்லிம்கள்!

### நேற்று மட்டும் 500 குடும்பங்கள் திரும்பின

(யாழ்ப்பாணம்)

1990 ஆம் ஆண்டு காலப்பகுதியில் யாழ். குடாநாட்டில் இருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம் குடும்பங்களில் சுமார் 500 குடும்பங்கள் நேற்றுக்காலை புத்தளத்தில் இருந்து மீள் குடியமர்வுக்காக யாழ். வந்து சேர்ந்தன.



நீர்கொழும்பு, புத்தளம், கொழும்பு ஆகிய பகுதிகளில் இதுவரை காலமும் வசித்து வந்த இக் குடும்பங்கள் ஆறு பஸ்வண்டிகளில் புத்தளத்தில் இருந்து நேற்று முன்தினம் இரவு புறப்பட்டு நேற்றுக் காலை யாழ். நகர் வந்து சேர்ந்தன.

இக்குடும்பங்கள் கிளிநொச்சி யாழ்ப்பாண முஸ்லிம் (11ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் சட்ட விரோத ஆட்கடத்தல் சர்வதேச அச்சுறுத்தலாக உருவெடுத்துள்ளது

### அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் ஆவேசம்

(கொழும்பு)

சட்டவிரோத குடியேற்றவாசிகளை நாடுகளுக்கிடையில் அழைத்துச் செல்லும் வர்த்தகம் சர்வதேச ரீதியான அச்சுறுத்தல் எனவும் சர்வதேச குற்றங்கள் முதல், சட்டவிரோத ஆயுதக் கடத்தல் வரை விரிவடையலாம் எனவும் இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.


சட்டவிரோத குடியேற்றங்கள் காரணமாக பாதிப்புக்குள்ளான நாடுகளின் ராஜதந்திர பிரதிநிதிகளுடன் நடைபெற்ற பேச்சுவார்த்தையொன்றின் போதே அமைச்சர் பீரிஸ் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த சட்டவிரோத நடவடிக்கையை தடுக்க விரிவான நோக்கங்களும், ஒத்துழைப்புகளும் ஏற்படவேண்டும். ஒரு நாட்டில் இருந்து இன்னுமொரு நாட்டுக்குச் செல்லும் சட்டவிரோத குடியேற்றங்களை தடுக்க வேண்டும். புலிகள் இதற்கு சிறந்தொரு



உதாரணம் எனவும் சட்டவிரோத குடியேற்றவாசிகளை அழைத்துச் செல்லும் வர்த்தகம் (11ஆம் பக்கம் பார்க்க)

# முறிந்துபோன சமாதானப்பேச்சுக்கள் விக்கிலீக்ஸ் வெளியிடும் இரகசியத் தகவல்!



(கொழும்பு)

அதிகளவு சலுகைகளைப் பெற புலிகள் முயற்சித்ததன் காரணமாகவே அரசுக்கும் புலிகளுக்குமிடையிலான சமாதானப்பேச்சுக்கள் முறிந்துபோனமைக்கு காரணம் என்று தற்போது விக்கிலீக்ஸ் வெளியிட்டிருக்கும் தகவல் பொதி ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதி உயர் இரகசியமாக இதுவரை பேணப்பட்டு வந்த இராஜதந்திர தகவல் பொதியில் அரசுக்கும் புலிகளுக்குமிடையில் இடம் பெற்ற சமாதானப் பேச்சுக்கள் குறித்தும், இப்பேச்சுக்களில் மேற்கு நாடுகளின் வகிபாகம் குறித்தும் ஜப்பானின் சமாதானத் தூதுவர் அகாசி மற்றும் இலங்கைக்கான யப்பானியத்தூதுவர் சிக்சிரோ ஒட்ஸ்சுகா ஆகியோர் புலிகளுடன் நடாத்திய பேச்சுக்கள் குறித்தும் விலாவாரியாக தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம், புலிகள் அமைப்பிற்கு போதிய சலுகைகளை வழங்கிய பின்னரும் மேலும் சலுகைகளைப் பெறவே சமாதான பேச்சுவார்த்தையிலிருந்து விலகியதாக புலிகள் ஜப்பானிடம் கூறியுள்ளனர்.

புலிகள் அமைப்பின் ஆலோசகரான அன்ரன் பாலசிங்கம் (11ஆம் பக்கம் பார்க்க)

# கைப்பணிப் பொருட்களின் கண்காட்சியை அமைச்சர் டக்ளஸ் ஆரம்பித்து வைத்தார்



(யாழ்ப்பாணம்)

பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத் தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் கீழான தேசிய வடிவமைப்பு நிலையத்தின் கைப்பணிப் பொருட்களின் கண்காட்சியும், விற்பனைச் சந்தையும் நேற்றுப் பிற்பகல் யாழ்.மத்திய கல்லூரியில் அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா அவர்களினால் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

யாழ். மத்திய கல்லூரியில் அகில இலங்கை ரீதியில் கைவினைப்பொருள் உற்பத்தியாளர்கள் தமது உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்யும் முகமாக காட்சிப்படுத்தியிருந்தனர். இதனை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைத்ததுடன், காட்சிப்படுத்தப்பட்ட உற்பத்திப் பொருட்கள் வைக்கப்பட்டிருந்த பல பகுதிகளையும் பார்வையிட்டு உற்பத்தியாளர்களுடன் கலந்துரையாடினார்.

இந்த நிகழ்வில், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்த்திரி அலென்ரின், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் கமலேந்திரன், யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், யாழ்.மாநகரசபையின் முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா, வடமாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் செல்வரத்தினம் உள்ளிட்ட பெருமளவான அரச அதிகாரிகள், அரச சார்பற்ற நிறுவன அதிகாரிகள், கைவினைப் பொருள் உற்பத்தியாளர்கள், பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இக்கண்காட்சியும், விற்பனையும் இன்றும், நாளையும் காலை 10.00 மணி முதல் மாலை 7.30 மணிவரை நடைபெறவுள்ளது. எனவே இதனைப் பல தரப்பினரும் பார்வையிட்டுப் பயன் பெறுமாறு வேண்டப்படுகின்றனர். (பா)

## மாடியிலிருந்து வீழ்ந்த இளைஞன் ஆபத்தானநிலையில் வைத்தியசாலையில்!

இரண்டு மாடிக் கட்டடம் ஒன்றில் கட்டுமானப் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த கட்டடத் தொழிலாளி ஒருவர் மின் கம்பியின் மீது தவறி வீழ்ந்து மின் சாரத் தாக்கத்திற்கு உள்ளாகிய சம்பவம் ஒன்று நேற்று முற்பகல் யாழ்.நகர்ப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

யாழ்.நகரில் யூனியன் வங்கியின் முன்பாக புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற இரண்டு மாடிக் கட்டடம் ஒன்றில் மூன்று பேர் கட்டுமானப் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த சமயம் நாவாந்துறையைச் சேர்ந்த அ.தபீபன் (வயது - 28) என்ற இளைஞனே திடீரென மாடியில் இருந்து தவறி வீழ்ந்த போது கீழே வீதியோரத்தில் போடப்பட்டிருந்த மின்சாரக் கம்பியின் மீது வீழ்ந்துள்ளார்.

அவ்வேளை அவரை மின் சாரம் தாக்கியதுடன், நிலத்தில் வீழ்ந்து படுகாயமுமடைந்தார். உடனடியாக இவர் யாழ்போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு, அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார். (பா)

## பாம்புக்கடிக்கு இலக்காகி விமானப்படை வீரர் பலி

பாம்புக்கடிக்கு இலக்காகி விமானப்படை வீரர் ஒருவர் மரணமடைந்துள்ளார். இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு 2.00 மணியளவில் பூவரசங்குளம் பிரதேச விமானப்படை முகாமில் இடம் பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாம்புக் கடிக்கு இலக்கான குறித்த படை வீரரை வவுனியா பொது வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றவேளையில், இவர் மரணமடைந்துள்ளதாகவும், இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (39)


வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகு
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

**வெளிவாரிப் பரீட்சைகள் - 2009**

**கலைமாணி பகுதி - I - 2008 & 2009 (வெளிவாரி)**

**மீள் பரீட்சார்த்திகளுக்கான அறிவித்தல்**

கலைமாணி பகுதி - I - 2007 பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகியுள்ளன. இப்பரீட்சையில் சித்தியடையத் தவறிய பரீட்சார்த்திகளிடமிருந்து மீள்பரீட்சைக்கான விண்ணப்பங்கள் 03.02.2011 (வியாழக்கிழமை) வரை ஏற்றுக்கொள்ளப்படும். ஒவ்வொரு பாட அலகிற்கும் மீள்பரீட்சார்த்திகள் செலுத்த வேண்டிய பரீட்சைக் கட்டணம் ரூபா 200/= ஆகும். யாழ்.பல்கலைக்கழகத்தில் இயங்கும் மக்கள் வங்கிக் கிளையில் ரூபா 100/= இனைச் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டினை வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகில் சமர்ப்பித்து விண்ணப்பப் படிவத்தினைப் பெற்றுக்கொள்ளலாம்.

தபால் மூலம் விண்ணப்பப் படிவத்தினைப் பெற விரும்புவோர் நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற பெயருக்கு எழுதப்பட்ட ரூபா 100/= க்கான காசுக்கட்டளை/தபாற் கட்டளையை, சுய முகவரியிடப்பட்ட ரூபா 40/= பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட 28X20 செ.மீ. அளவுடைய தபால் உறையுடன், 'உதவிப் பதிவாளர், வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்' என்ற முகவரிக்கு அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

பரீட்சைகள் நடைபெறும் திகதி மற்றும் விபரங்கள் பின்னர் பத்திரிகைகளில் விளம்பரப்படுத்தப்படும்.

மேலதிக விபரங்களுக்கு 021-222 3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம்.

பதிவாளர்.
10.01.2011.

(C/365)



**UNIVERSITY OF JAFFNA, SRI LANKA**

**WALK IN INTERVIEW**

**Supervision of Works on Assignment for 03 Months**

**Fencing at Faculty of Agriculture, Ponnagar, Kilinochchi, University of Jaffna**

The University of Jaffna invites suitable candidates (with qualification NDT civil or Quantity Surveying or equivalent) for the above. A walk in interview will be held on 13.01.2011 at 10.00 am in the Board Room. University of Jaffna. Thirunelveli. Candidates are requested to bring the relevant certificates.

Registrar.
10.01.2011.

(C/195)


## பொது அறிவுப் போட்டிகள் நடாத்தும் சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசம்

### கல்வி வளர்ச்சியை ஏற்படுத்தும் முயற்சி

(கொக்குவில்)

குடாநாட்டு கிராமப் புறங்களில் கல்விசார் முன்னேற்றம் மந்தமாகவே காணப்படுகின்றது. இதனால், சமூக மட்டங்களில் கல்வி சார்ந்த அறிவூட்டல்களை வளர்க்க சமூக முன்னேற் றக் கழகங்களின் சமாசம் கல்வி மற்றும் பொது அறிவுப் போட்டிகளை நடத்த முன்வந்துள்ளது.

நேற்று முன்தினம் ஞாயிறு மாலை யாழ்.புகையிரத நிலைய வீதியில் சமாசத்தின் நல்லூர் பிராந்தியத்தின் பொதுக்கூட்டம் நடைபெற்றபோதே அதன் தலைவர் அ.அல்பேட் மேற்கண்டவாறு கூறினார்.

தொடர்ந்து அவர் பேசுகையில், சமூகத்தின் உயர்நிலை வளர்ச்சிக்கு கல்வி ஒன்றே இன்றியமையாத ஏணிப்படிகளாக விளங்குகிறது. பட்டினி கிடந்தேனும் பிள்ளைக்கு கல் வியை ஊட்டும் எண்ணம் ஒவ் வொரு பெற்றோர்களிடமும் வளர வேண்டுமெனக் கேட்டுக்கொண டார்.

யாழ்.மாவட்ட பிரதம இணைப்பாளர் சி.செல்லத்துரை உரையாற்றுகையில்,

சமூக முன்னேற்றக்கழகங்களின் சமாசம் கிராமங்கள் தோறும் அங்கத்துவக் குடும்பங்களுக்கு பல நிவாரண உதவிகளைத் தொடர்ந்து வழங்கி வருகிறது. கல்வி மற்றும் வாழ்வியலுக்கான நிவாரண உதவிகள் அவற்றில் அடங்கும். அது சரிவர நடைமுறைப்படுத்தப்படவில்லையென்றால் எம்மால் வகுக்கப்பட்டுள்ள நல்லூர், மானிப்பாய் மற்றும் தென்மராட்சி, வடமராட்சி, வலி. கிழக்கு ஆகிய 5 பிராந்திய நிர்வாகப் பிரிவுகளின் முடங்கல்களே காரணம். தற்போதுள்ள சமூக நிலையைப் பயன்படுத்தி மீண்டும் அவை உற்சாகத்துடன் செயற்பட்டு சமூக முன்னேற்றத்திற்கு அடிகோல வேண்டும். இவ்வாறு அவர் கேட்டுக் கொண்டார்.

புதிய நிர்வாகத் தெரிவின் போது கீழ்க்கண்டோர் தெரிவு செய்யப்பட்டனர்.

பிரதம அமைப்பாளர் அ. அல்பேட், தலைவர் க.நடேசன், இணைத்தலைவர்கள் மு.அப்புலிங்கம், வே. செல்வராசா, செயலாளர் திருமதி இ.நவமணி (ஆசிரியை), செயலாளர் செல்வி.ந.சிந்துஜா (மாணவி), பொருளாளர் சி.சிவலிங்கம், நிர்வாக சபை உறுப்பினர்கள்: தி. சின்னத்துரை , சு.நரேஜ், க. கணேஸ், த.சந்திரமோகன், த. பரமலிங்கம், செல்வி. எல்.எனஸ்ரா மேரி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (68)

## கிளிநொச்சியிலிருந்து புறப்படும் பேருந்துகளின் நேர அட்டவணை

இலங்கை போக்குவரத்துச் சபையின் கிளிநொச்சிச் சாலையில் மேற்கொள்ளப்படும் நெடுந்தூர பேருந்து சேவையில் ஈடுபடும் பேருந்துகளின் பயண நேரங்களினை கிளிநொச்சி சாலையின் முகாமையாளர் அறியத்தந்துள்ளார்.

விசுவமடு மற்றும் ஸ்கந்தபுரம் பகுதிகளில் இருந்து பி.ப. 2.00 மணிக்கு கிளிநொச்சி சாலையூடாக யாழ்ப்பாணம் வரை இரு நெடுந்தூர பேருந்து சேவைகளும், முல்லைத்தீவில் இருந்து பி.ப. 1 மணிக்கும், முத்தையன்கட்டு ஒட்டுசுட்டானில் இருந்து பி.ப. 1.45 மணிக்கும் புறப்படும் பேருந்துகள் கிளிநொச்சியூடாக யாழ்ப்பாணத்தைச் சென்றடையும். பின்னர் இப்பேருந்துகள் யாழ்ப்பாணத்தில் இருந்து மறுநாள் காலை 6 மணிக்கு விடுவமடுவிற்கான பேருந்தும், காலை 6.15 இற்கு ஸ்கந்தபுரத்திற்கான பேருந்தும், காலை 6.30 மணிக்கு முல்லைத்தீவிற்கான பேருந்தும், காலை 7 மணிக்கு முத்தையன்கட்டு ஒட்டுசுட்டானிற்கான பேருந்தும் யாழ்.மத்திய பேருந்து நிலையத்திலிருந்து புறப்பட்டு கிளிநொச்சியூடாக அந்தந்த இடங்களினைச் சென்றடையும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

வவுனியாவுக்கான பேருந்துகள் காலை 4.30, 10.30, 11.30, மாலை 4.30 ஆகிய நேரங்களில் கிளிநொச்சி பஸ்தரிப்பிடத்தில் இருந்து புறப்படும் என தெரிவித்ததுடன், வீதியின் சீரின்மை காரணமாகவே பேருந்து போக்குவரத்தில் இடையூறுகள் ஏற்படுவதாக அவர் மேலும் தெரிவித்தார். (69)

## அதிகரிக்கும் கசிப்பு உற்பத்தி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் கசிப்பு உற்பத்தியும், விற்பனையும் அதிகரித்துள்ளதாக அறிய முடிகின்றது. சாந்தபுரம், தருமபுரம். மாயவனூர், புதுக்காடு, கட்டைக்காடு, சம்புக்குளம் போன்ற இடங்களில் கசிப்பு உற்பத்தியும், விற்பனையும் அதிகரித்துள்ளதாக பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, சமூக சீரழிவிற்குள்ளாக்கும் கசிப்பு உற்பத்தி, விற்பனை என்பவற்றைத் தடுக்க சம்பந்தப்பட்டவர்கள் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என பொதுமக்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. (69)

## வவுனியாவில் கன மழை

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் கடந்த வாரங்களில் கனமழை பெய்துள்ளது. கடந்த ஞாயிறு முற்பகல் 8.30 மணி முதல் கடந்த திங்கள் முற்பகல் 8.30 மணிவரையான 24 மணி நேரங்களில் 21.6 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளதாக வவுனியா மாவட்ட வானிலை அவதான நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். (39)

பணத்தின் நான்கில் ஒரு பகுதியை மகிழ்ச்சியாகச் செலவிட வேண்டும். இரு பகுதிகளைத் தொழிலில் ஈடுபடுத்த வேண்டும். நான்காம் பகுதியை சேமிக்க வேண்டும். அது ஆபத்துக்கு உதவும்.

-பர்மிய அறிஞன்-

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

## ஒத்துழைப்புத் தேவை

ஊடகங்களின் பணிபற்றி தெரியாதவர்களும், தெரிந்துகொள்ள முயற்சிக்காதவர்களும் ஊடகவியலாளர்களைப் பகைமை உணர்வுடன் சந்தேகக் கண் கொண்டே பார்த்து வருகின்றார்கள்.

சாதாரணமான வாசகர்களைவிட அரச திணைக்களங்கள், வைத்தியசாலைகளில் பொறுப்பான பதவிகளை அலங்கரித்துவரும் ஒருசில அதிகாரிகளே இவ்வாறு நடந்துகொள்கிறார்கள்.

அந்த அதிகாரிகள் ஏன் இவ்வாறு நடந்துகொள்கிறார்கள் என்பது ஊடகவியலாளர்களுக்குப் புரியாத புதிராக உள்ளது.

தினமும் நாட்டில் இடம்பெறும் சம்பவங்களை உடனுக்குடன் மக்களுக்கு வழங்கி அவர்களின் தேவைகளில் காணப்படும் குறைபாடுகளை இனங்கண்டு அவற்றைத் தீர்த்துவைப்பதற்கான வழிகாட்டிகளாகவும், ஆலோசனை வழங்குபவர்களாகவுமே ஊடகவியலாளர்கள் தமது ஊடகப்பணியை ஆற்றிவருகின்றார்கள்.

அண்மைக்காலமாக நாட்டில் இடம்பெற்றுவரும் வீதி விபத்து சம்பவங்களினால் அருகில் உள்ள பிரதேச வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்ட பின், மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கே பாதிக்கப்பட்டவர்கள் எடுத்து வரப்படுகிறார்கள்.

இவர்கள் பற்றிய தகவல்களை ஊடகவியலாளர்கள் வைத்திய சேவையில் கடமையாற்றுபவர்களிடம் இருந்து பெறுவது கல்லில் நார் உரித்தலுக்கு ஒப்பாக உள்ளது.

விபத்துச் சம்பவங்கள் என்பது நாம் எதிர்பாராத நிலையில் வருவதுண்டு. இந்நிலையில், விபத்தில் சிக்கியவர்களின் விபரத்தையும், அவர்களின் நிலை பற்றியும் மக்களுக்கு மட்டுமல்லாது, அவர்களது உறவினர்களுக்குத் தெரியப்படுத்தவேண்டியது ஊடகவியலாளர்களது கடமை என்பதைப் புரிந்துகொள்ளமுடியாத ஒருசில வைத்தியசாலை ஊழியர்கள், விபத்தில் சிக்கியவரின் விபரத்தை தெரிவிக்க மறுப்பதை எந்த மனிதநேயத்தில் அடக்குவது?

ஊடகவியலாளர்கள் வைத்தியசாலைக்குள் செல்வதற்கு அனுமதிக்கப்பட்டாலும், விடுதிகளுக்குள் தப்பித்தவறி சென்று சம்பந்தப்பட்டவர்களிடம் விபரம் கேட்டால் "நோயாளிகளைப் பார்வையிடும் நேரத்தில் மட்டும் வாருங்கோ" என்று சிலர் முகத்தைச் சுழித்து பதிலளிக்கிறார்கள்.

இன்னும் சிலர் "வைத்தியசாலை சம்பந்தமான செய்திகளை உங்களுக்கு எம்மால் வழங்கமுடியாது. பணிப்பாளாரின் அனுமதி பெற்று வாருங்கள்" என்று அலட்சியமாகக் கூறி விடுகிறார்கள்.

'மக்கள் சேவையே மகேசன் சேவை' என்று முன்னைய காலங்களில் வைத்தியசாலை பணிப்பாளர்களாகப் பணியாற்றிய ஒருசில உயரதிகாரிகள், ஊடகவியலாளர்களை அழைத்து மாநாடுகளை நடத்தி வைத்தியசாலையில் நிலவும் பிரச்சினைகளைக் கூறிய காலமொன்று இருந்தது.

யுத்தத்தைக் காரணம்காட்டி இத்தகைய மாநாடுகளைத் தவிர்த்தவர்கள், யுத்தம் முடிவடைந்து நாடு அபிவிருத்திப் பாதையில் முளைவிட்டுச் செல்லும் வேளையில் ஊடகவியலாளர்களை அழைத்து வைத்தியசாலையின் நிலைபற்றி கூறத் தயங்குவதேன்?

மனிதநேயத்துடன், மனிதாபிமானப் பணியை, சேவைமனப்பான்மையுடன் நோயாளர்களுக்கு செய்வதற்கு வைத்தியசாலையின் பணிப்பாளர் முதல் சாதாரண ஊழியர்வரை இதயசுத்தியுடன் செய்ய முன்வந்தால் ஊடகவியலாளர்களும் வைத்தியசாலையின் நடைமுறைகளுக்கமைவாக ஒத்துழைப்பு வழங்க என்றும் சித்தமாக இருப்பர்.

- ஆசிரியர் -

# தேசிய வடிவமைப்பு நிலையத்தின் யாழ்.காரியாலயத்தை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்றுத் திறந்துவைத்தார்



(கொழும்பு)

தேசிய வடிவமைப்பு நிலையத்தின் யாழ். மாவட்டத்திற்கான இணைப்பு நடவடிக்கைகள் காரியாலயம் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், பாரம்பரிய கைத் தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவால் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்திலுள்ள கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் கட்டிடத்தின் ஒரு பகுதியில் இக்காரியாலம் அமைக்கப்பட்டுள்ளது.

அங்கு சென்ற அமைச்சரை தேசிய வடிகாலமைப்பு நிலையத்தின் தலைவர், பணிப்பாளர் உள்ளிட்டோர் வரவேற்றனர்.

காரியாலயத்தை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நடாவை வெட்டித் திறந்து வைத்ததுடன் அதன் பணிகளையும் சம்பிரதாயபூர்வமாகத் தொடங்கி வைத்தார்.

தொடர்ந்த வடிவமைப்பு நிலையத்தின் பணிப்பாளர், தலைவர் மற்றும் யாழ்.மாவட்ட பணிப்பாளர் உள்ளிட்டோருடன் நிலையத்தினால் முன்னெடுக்கப் படவுள்ள எதிர்காலத் திட்டங்கள் குறித்தும் விரிவாக் கலந்துரையாடினார்.

## வன்னி மாவட்ட உள்ளூராட்சித் தேர்தல் இளம் வேட்பாளர்களுக்கு முன்னுரிமை

வன்னி மாவட்ட உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடுகின்ற அனைத்துக் கட்சிகளுடைய வேட்பாளர் பட்டியலிலும் இளம் வேட்பாளர்கள் கட்டாயம் இடம்பெறவேண்டும் என வன்னி மாவட்டத் தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரி ஏ.எஸ்.கருணாநிதி தெரிவித்தார்.

கட்சிகள் தாம் போட்டியிடுகின்ற சபைக்கு ஏற்றவாறு ஒதுக்கீடு செய்யப்பட்ட இளம் வேட்பாளர்கள் வேட்பாளர் பட்டியலில் இருக்கவேண்டும் என அவர் குறிப்பிட்டார். வன்னி மாவட்டத்தில் 12 பிரதேச சபைகளுககு நியமனப் பத்திரங்கள் கோரப்பட்டுள்ளது.

# ஜனாதிபதி தலைமையில் யாழில் தேசிய பொங்கல் விழா

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் இம்முறை தைப்பொங்கல் விழாவை கோலாகலமாகக் கொண்டாட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி நேற்றுத் திங்கட்கிழமை ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

வடபகுதியில் நடைபெறவுள்ள தைப்பொங்கல் விழாவில் ஜனாதிபதி கலந்துகொள்வது இதுவே முதற் தடவையாகும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

பொங்கல் விழாவில் கலந்து சிறப்பிக்கவுள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அங்கு நடைபெறவுள்ள கலை,கலாசார நிகழ்வுகளில் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.



பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ. சந்திரசிறி, யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர், யாழ். மேயர் உட்பட அதிகாரிகளின் பங்களிப்புடன் வடபகுதி மக்களினால் இந்தப் பொங்கல் விழா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பொங்கல் விழாவை முன்னிட்டுப் பல்வேறு கலை, கலாசார நிகழ்வுகளும், தென்னிந்திய கலைஞர்களின் இசை நிகழ்ச்சிகளும் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

# கல்விசார் போட்டிகள்

(கொக்குவில்)

சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசம், அங்கத்துவக் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கும், 30 வயதிற்கு மேற்படாத இளைஞர், யுவதிகளுக்குமான கல்விசார் போட்டிகளை நடத்த முன்வந்துள்ளது.

பிரிவு 5- தரம் 3 முதல் க.பொ.த உயர்தரம் வரையிலானவர்களுக்கும், பிரிவு-6 30 வயதிற்கு உட்பட்ட திறந்த பிரிவினர்களுக்குமான போட்டிகள் நடைபெறும்.

தமிழ் மொழியிலான கட்டுரை, பேச்சு, கவிதை, திருக்குறள் மனனம் ஆகியவற்றுடன் ஆங்கில மொழியிலான கட்டுரை, பேச்சுப் போட்டிகளும் நடத்தப்படவுள்ளது.

போட்டிகள் யாழ்மத்திய கல்லூரியில் இம்மாதம் 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும், அடுத்த மாதம் 27 ஆம் ஞாயிற்றுக்கிழமையும் காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை இடம்பெறும்.

நிபந்தனைகள் மற்றும் போட்டிகளுக்கான தலைப்புகளையும் பிராந்திய செயலகங்களிலும் இம்மாதம் 16ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமைக்கு முன்பாக விண்ணப்பிக்க வேண்மெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (68)

## காலநிலை சீர்கேடு மீனவர்கள் பாதிப்பு

(வடமராட்சி)

வடமராட்சி வடக்கு, கிழக்கு பிரதேசங்களைச் சேர்ந்த மீனவர்கள் கடந்த ஒருவாரகாலமாக கடற்றொழிலை இழந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த சில வாரங்களாக வழமைக்கு மாறாகக் காணப்படும் மழை, காற்று, கடலலையின் தாக்கத்தினால் மீனவர்கள் கடற்றொழிலுக்குச் செல்லமுடியாத நிலை காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் தொண்டைமானாறு முதல் வடக்கு ஆழியவளை வரையுள்ள பல ஆயிரக்கணக்கான மீனவக் குடும்பங்கள் வாழ்வாதாரத்தை இழந்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தமது குடும்ப நிலைமையைக் கருத்திற்கொண்டு கடலுக்குச் செல்கின்ற போதிலும் சிறு சிறு விபத்துகளை சந்திதே திரும்பி வருவதாகவும் அம்மீனவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதனையடுத்து வடமராட்சிப் பகுதியில் கடலுணவுகளுக்குத் தட்டுப்பாடு நிலவுவதுடன் விலையும் அதிகரித்துக் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (100)

## நேரேவ் திட்டத்தின் கீழ் மூன்று வீதிகள் புனரமைப்பு

(வடமராட்சி)

சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவில் நேறேப் திட்டத்தின் கீழ் 3 வீதிகள் விரைவில் புனரமைக்கப் படவுள்ளதாக பிரதேச சபை செயலாளர் நே.சிவராஜலிங்கம் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தெரிவிக்கையில், இவ்வீதிகளைத் திருத்துவதற்கு ஒருகோடி 60 இலட்சம் ரூபா நிதி செலவிடப்படுவதாகவும் இதற்கான ஏற்பாடுகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

விரைவில் இவ்வீதிகள் புனரமைப்புச் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (100)

## வன்னிப் பகுதிகளுக்கு பொலிஸ்மா அதிபர் விஜயம்

(வவுனியா)

வவுனியா மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களுக்கு பொலிஸ் மா அதிபர் மகிந்த பாலசூரிய உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளார்.

நேற்று முன்தினம் கிளிநொச்சிக்கும் நேற்று வவுனியாவிற்கும் விஜயம் மேற்கொண்ட அவர் இரு மாவட்டகளிலுமுள்ள ஒவ்வொரு நிலைய பொலிஸ் பொறுப்பதிகாரிகள் மற்றும் மேற்தர சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் ஆகியோரைச் சந்தித்துக் கலந்துரையாடியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதைவிட, கிளிநொச்சி, வவுனியா மாவட்டங்களில் நடைபெற்று வரும் குற்றச் செயல்களைத் தடுத்து நிறுத்துவதற்கு தக்க நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என ஒவ்வொரு பிரிவுக்கும் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகளுக்கும் அவர் பணித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (39)

# உயிருக்கு உலைவைக்கும் கால்வாய்கள் பாதுகாப்பு நடவடிக்கைக்கு ஏன் தயக்கம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தின் சில பிரதான வீதிகளின் ஓரங்களில் காணப்படும் கிணறுகள் மற்றும் கால்வாய்களால் வீதியால் பயணம் செய்வோர் உயிராபத்தை எதிர்கொண்டுள்ளனர்.

உரிய கட்டுக்களோ அல்லது மதகுகளோ கட்டப்படாத நிலையிலிருக்கும் இவை, இரவு வேளைகளில் கண்ணுக்குத் தெரியாததால் விபத்துகள் ஏற்படும் அபாயம் காணப்படுகிறது.

பருத்தித்துறை வீதியில், அச்சுவேலி தெற்கு ஆவலம்பதி பகுதியில், வீதியின் ஓரத்தில் பாழடைந்த கிணறு ஒன்று கட்டுக்கள் எதுவுமற்று நில மட்டத்துடன் காணப்படுகிறது. அதே வீதியில் உள்ள நவோதயா வீதிப் பகுதியிலும் இது போன்ற மற்றுமொரு கிணறு உள்ளது.

இரண்டுமே மழை நீர் நிரம்பிக் காணப்படுவதால் பாதசாரிகளோ, வாகனங்களிலோ வருவோர் தவறி விழுந்தால் உயிராபத்து ஏற்படக்கூடிய சாத்தியக்கூறு உள்ளது.

இதேபோல், பலாலி வீதியில் இலுப்பையடிச் சந்திக்கு அருகிலுள்ள ஆழமான கால்வாய் ஒன்று உரிய பாதுகாப்புச் சுவர் எதுவுமின்றிக் காணப்படுகிறது.

வீதியோரங்களில், போக்குவரத்துப் பாதைக்கு மிகச் சமீபமாக, எவ்வித பாதுகாப்புமற்றிருக்கும் இவ்வாறான கிணறுகள் மற்றும் கால்வாய்களால் வீதியால் பயணம் செய்வோர் உயிராபத்தை எதிர் கொண்டுள்ளனர்.

இவற்றை உரியவர்கள் கவனத்திலெடுத்து உரிய பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்று பிரதேசவாசிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# அடிக்கடி பழுதடைகின்ற மண்டைதீவு பேருந்துகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மண்டைதீவுப் பகுதிக்கும் யாழ்.நகருக்கும் இடையே போக்குவரத்துச் சேவையில் ஈடுபட்டுவரும் இலங்கைப் போக்குவரத்துச் சபைப் பேருந்து அடிக்கடி பழுதடைந்து வருவதால் பயணிகள் மிகுந்த சிரமமடைந்து வருகின்றனர்.

கடந்த வெள்ளிக்கிழமையும், சனிக்கிழமையும் அடுத்தடுத்து இப்பகுதிகளுக்கிடையில் சேவையில் ஈடுபட்டுவரும் பயணிகள் பேருந்து பழுதடைந்தது. இதன் காரணமாக இப் பேருந்தில் பயணம் செய்த பொதுமக்கள் அதில் இருந்து இறங்கி நீண்ட தூரம் நடந்து தமது பயணத்தைத் தொடர வேண்டியிருந்தது.

இதன் பின்னர் யாழ்.மத்திய பேருந்து நிலையத்திற்கு அறிவிக்கப்பட்டு பிறிதொரு பேருந்து இப்பகுதிகளுக்கிடையிலான சேவையில் ஈடுபடுத்தப்பட்டது.

எனவே இப்பகுதிகளுக்கிடையேயான போக்குவரத்துச் சேவையில் நல்ல நிலையில் உள்ள பேருந்து ஒன்றை சேவையில் ஈடுபடுத்துமாறு பயணிகள் இலங்கைப் போக்குவரத்துச் சபையினரைக் கேட்டுக்கொள்கின்றனர்.

மேலும் இப்பகுதிகளில் பெருமளவு மக்கள் தினமும் யாழ். நகரிற்கு தமது அலுவல்கள் நிமித்தம் சென்று வருவதன் காரணமாக இப்போக்குவரத்துச் சேவையைப் பாதிப்பின்றி மேற்கொள்ளுமாறும் பயணிகள் சம்பந்தப்பட்டவர்களைத் தயவாகக் கேட்டுள்ளனர். (பா)

# முருகானந்தா மகா வித்தியாலயத்தில் ஆங்கில மொழி மூலக் கற்கை ஆரம்பம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் முதன் முதலாக ஆங்கில மொழி மூல வகுப்புகள், கிளிநொச்சி முருகானந்தா மகா வித்தியாலயத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை பாடசாலை அதிபர் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கிளிநொச்சி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேல், கண்டாவளைக் கல்விக்கோட்டக் கல்விப் பணிப்பாளர் வீ.இராஜகுலசிங்கம், ஆரம்பக்கல்வி உதவிப் பணிப்பாளர் சி.கணேசலிங்கம், பாடசாலை அபிவிருத்திச் சங்கக் குழுவினர், பெற்றோர், மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

முதன் முதலாக ஆறாம் தரற்திற்கு ஆரம்பிக்கப்பட்ட இந்த ஆங்கில மொழி மூலக் கற்கைநெறி ஏனைய தரங்களுக்கும் விரைவில் ஏற்படுத்தப்படுமென பாடசாலை வட்டாரத் தகவல்கள் தெரிவித்தன.


# மன்னார் ஆசிரிய உதவியாளர்களுக்கு இறுதிப் பரீட்சை இம்மாதம் நடைபெறும்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் ஆசிரிய உதவியாளர்களாக நியமனம் பெற்று பின்னர் 2009 ஆம், 2010 ஆம் ஆண்டு காலப் பயிற்சிக்காக யாழ்ப்பாணம், கோப்பாய் மற்றும் பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளில் பயிற்சியை முடித்தவர்களுக்கான இறுதிப் பரீட்சை இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி இந்தப் பரீட்சைகள் இந்த மாதம் 18 ஆம் திகதி தொடக்கம் 23 ஆம் திகதிவரை நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக மன்னார் வலயக் கல்விப்பணிப்பாளர் எம்.ஏ.ரெவல் தெரிவித்தார்.

இதற்கான ஏற்பாடுகளை குறித்த பயிற்சிக் கல்லூரிகளின் அதிபர்கள் மேற்கொண்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.



இந்த நிலையில், தற்போது மன்னார் மற்றும் புத்தளம் மாவட்ட பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் குறித்த பயிற்சியை நிறைவு செய்த ஆசிரியர்கள் தவறாது பரீட்சைக்குத் தோற்றுமாறும் கேட்கப்பட்டுள்ளனர்.

இதற்கான ஆயத்தங்களை மேற்கொள்ள விரும்புபவர்கள் இன்றிலிருந்து கடமை விடுமுறையைப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் வலயக் கல்விப்பணிப்பாளர் ரெவல் தெரிவித்தார்.

# திரிபோஷா தயாரிப்பதற்காக வருடாந்தம் 125 கோடி ரூபா

(கொழும்பு)

கண்டாவளை திரிபோஷா தொழிற்சாலையில் தற்பொழுது மாதாந்தம் 15 இலட்சம் திரிபோஷா பொதிகள் தயாரிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவை மொத்த உற்பத்தியில் 60 சதவீதமானவையாகும். இதன் உற்பத்தியினை அதிகரிப்பதற்கு சுகாதார அமைச்சு தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

திரிபோஷா தயாரிப்பதற்காக வருடாந்தம் 125 கோடிரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்படுகின்றது. போஷாக்கற்ற குழந்தகளுக்கும் கர்ப்பிணித் தாய்மார்களுக்கும் திரிபோஷா இலவசமாக வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.



அல்லாரையில் உள்ள விவசாயப் பண்ணையைப் பார்வையிட்டு அவர்களது தேவைகள் அபிவிருத்தி பற்றி கலந்துரையாடலில் ஈடுபடும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவையும், பண்ணை முக்கியஸ்தர்களையும், பொது மக்களையும் காணலாம். (11)

# முருகானந்தா மகா வித்தியாலயத்திலும் தேசிய சேமிப்பு வங்கிக் கிளை திறப்பு

(கிளிநொச்சி)

கிளி / முருகானந்தா மகாவித்தியாலயத்திலும் கடந்த வெள்ளிக்கிழமை பி.ப 12 மணியளவில் தேசிய சேமிப்பு வங்கியின் பாடசாலைக்கான கிளையொன்று ஆரம்பித்து வைக்கப்பட்டது. அதிபர் தலமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் தேசிய சேமிப்பு வங்கியின் வடக்கு மாகாணப் பணிப்பாளர் ராபீக் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். இந் நிகழ்வில் கிளிநொச்சி தேசிய சேமிப்பு வங்கியின் முகாமையாளர் டி. சிவராஜ், வங்கி ஊழியர்கள் முதலானோரும் கலந்து சிறப்பித்தனர். வங்கியின் பிரதான நோக்கங்களையும் அதன் செயற்பாடுகளையும் எடுத்துரைத்த பிரதம விருந்தினர், மாணவர்களுக்கான பரிசில்களையும் வழங்கினார். தற்போது கிளிநொச்சிப பாடசாலைகளில் வங்கிக் கிளைகள் திறக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (21)

# முன்பள்ளி ஆரம்பம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி நகரை அண்டியுள்ள கிராமமான ஆனந்தபுரம் கிழக்குப் பகுதியில் அன்னை முன்பள்ளி கடந்த 3 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு. இயங்கி வருகின்றது.

இதில் மட்டுப்படுத்தப்பட்ட மாணவர்களையே இணைத்துக் கொள்ளவுள்ளதாக முன்பள்ளியின் முதன்மை ஆசிரியர் திருமதி யோகராசா தெரிவித்தார்.

இதேவேளை கனகபுரம் பகுதியிலுள்ள றோயல் முன்பள்ளியும் கடந்த 5 ஆம் திகதி மீண்டும் புதுப்பொலிவுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் இதில் ஆங்கிலம், தமிழ் மொழி ஆகிய பாடங்களை மாணவர்களுக்கு வழங்கவுள்ளதாகவும் இம் முன்பள்ளியின் நிர்வாக ஆசிரியர் தெரிவித்தார். (77)

# "ஆற்றுகை பகிர்வு" வெளியிடப்பட்டது

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தின் செயற்பாடுகள் அடங்கிய "ஆற்றுகைப் பகிர்வு" இதழின் 4ஆம் இதழ் வெளியிடப்பட்டுள்ளது.

மக்களின் மீள்குடியேற்றத்திற்குப் பின்னரான 2010 ஆம் ஆண்டின் நடவடிக்கைகளின் தொகுப்பாக இவ்விதழ் வெளிவந்துள்ளது.

இதில் மீள்குடியேறிய மக்களின் தகவல்கள், மக்களின் அபிவிருத்தி தொடர்பான தகவல்கள், மக்களின் மீள்குடியேற்றத்தின் பின்னரான நிர்வாகச் செயற்பாடுகள் போன்ற விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (28)

# முன்பள்ளி திறப்பு விழா

(யாழ்பாணம்)


யாழ். மாநகர சபை முன்பள்ளித் திறப்பு விழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு யாழ். மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சர் திஸ்ஸ கரலியத்த பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே. என். டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ. சந்திரசிறி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சின் செயலாளர் காமினி குலசேகர, கேமாஸ் நிறுவன முகாமையாளர் திருமதி சிரோமி மககொரல்ல, வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் திருமதி ர.விஜயலட்சுமி, மாகாணக்கல்வி விளையாட்டுத்துறை பண்பாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் இ. இளங்கோவன், சிறுவர் செயலகப் பணிப்பாளர் திருமதி யமுனா பெரேரா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

# கிழக்குப் பல்கலைக்கழக கல்வி நடவடிக்கை ஒருவார காலத்திற்கு இடைநிறுத்தப்பட்டுள்ளது



(மட்டக்களப்பு)

கிழக்கு பல்கலைக்கழகத்தின் கல்வி நடவடிக்கை, நிர்வாக நடவடிக்கைகள் அனைத்தும் ஒரு வார காலத்துக்கு நிறுத்தப்பட்டுள்ளதாக கிழக்கு பல்கலைக்கழக பதிவாளர் தயாபரன் தெரிவித்தார்.

கிழக்கில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக பல்கலைக்கழகத்தின் நிர்வாகப் பகுதி வெள்ளத்தில் மூழ்கியுள்ளதாலும் மாணவர்களின் போக்குவரத்துப் பிரச்சினைகள் காரணமாகவுமே பல்கலைக் கழகத்தை மூடுவதற்கு முடிவெடுத்ததாக பதிவாளர் தெரிவித்தார்.

பல்கலைக்கழகத்தை அண்டிய பகுதி மக்கள் பல்கலையின் ஒருபகுதியில் தங்கியிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். அத்தோடு, மட்டக்களப்பிலுள்ள சௌக்கிய பராமரிப்புப் பீடமும் விபுலானந்தாக் கல்லூரியும் ஒருவார காலம் மூடப்படும் எனவும் தெரிவித்தார்.

விடுதியில் தங்கியுள்ள ஒருதொகுதி மாணவர்கள் தமது வீடுகளுக்குச் சென்றுள்ளனர். ஏனைய மாணவர்களையும் அவர்களது வீடுகளுக்கு அனுப்பும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் சுட்டிக்காட்டினார்.

அதேவேளை இம்மாதம் 12ஆம் திகதி நடைபெறவிருந்த பல்கலைக்கழக கலாசார விழா, காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக மாணவர் ஒன்றியத்தின் தலைவர் விமல்ராஜ் தெரிவித்தார்.

இதேவேளை பதில் உபவேந்தர், மாணவர்கள் சேர்ந்து பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரண நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் தொடர்ந்தும் நிவாரண நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளதாகவும் மாணவர் ஒன்றியத்தின் தலைவர் விமல்ராஜ் மேலும் தெரிவித்தார்.

# மாடுகள் கொல்களம் இல்லை மக்கள் விசனம் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

கனகராயன்குளத்தில் மாடுகள் கொல்களம் அமைக்கப்படாததற்கு அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

கனகராயன்குளப் பிரதேச சபையினால் கொல்களம் அமைத்துத் தராமையால் அப்பகுதியில் இறைச்சிக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. தற்போது காட்டு மிருகங்கள், உடும்பு போன்றவற்றை இறைச்சிக்குப் பிடிப்பதை அப்பகுதி பொலிஸார் தடைவிதித்துள்ளனர்.

இதனால், அப்பகுதியில் மாடுகள் வெட்டுவதற்கான கொல்களம் ஒன்றையும் இறைச்சிக் கடை ஒன்றையும் அமைத்துத் தரும்படி அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (12)

# தேசிய போஷாக்கு சபை 14 ஆம் திகதி ஆரம்பம்

(கொழும்பு)

தேசிய போஷாக்கு சபை எதிர்வரும் 14 ஆம் திகதி ஸ்தாபிக்கப்படவுள்ளதாக சுகாதார அமைச்சர் மைத்திரிபால ஸ்ரீசேன தெரிவித்தார்.

நாட்டிலுள்ள குழநதைகள் மற்றும் கர்ப்பிணித்தாய்மார்களின் போஷாக்கை மேம்படுத்தும் வேலைத்திட்டங்களை வலுவூட்டுவது இதன் நோக்கமாகும்.

இந்த நிகழ்வு ஜனாதிபதி மகிந்தராஜபக்ஷ தலைமையில் நடைபெறவுள்ளதுடன் இந்தச் சபையை ஸ்தாபிப்பதற்கு பல அமைச்சுக்கள் ஒத்துழைப்பு வழங்கியுள்ளன.

இதைவிட யுனிசெவ் நிறுவனமும் இந்தத் திட்டத்திற்கு பூரண ஒத்துழைப்பு வழங்கியதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# வவுனியா வடக்கு கல்வி வலயத்திலும் இரண்டு பாடசாலைகள் தெரிவாகின

(நெல்லியடி)

2011 ஆம் ஆண்டில் வவுனியா வடக்கு கல்வி வலயத்திலிருந்து இசுறு பாடசாலையாக இரு பாடசாலைகளைக் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

நெடுங்கேணி கோட்டப் பிரிவில் வவுனியா கனகராயன் குளம் மகா வித்தியாலயமும், ஓமந்தைக் கோட்டத்தில் வவுனியா புதுக்குளம் மகாவித்தியாலயமுமே இவ்வாறு தெரிவு செய்யப்பட்டவையாகும்.

மாணவர்கள் நகரப்புறப் பாடசாலையை நோக்கி நகர்வதைத் தடுத்து கிராமப்புறப் பாடசாலைகளை நகரப்புறப் பாடசாலையாக மாற்றுவதே இதன் நடவடிக்கையாகும்.

இதற்கென 36 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பாடசாலையின் பௌதீக வளங்கள், புனரமைப்பு வேலைகள் வர்ணம் பூசுதல் போன்றவை இடம்பெற்று வருகின்றன.

இங்கு பணியாற்றும் அதிபருக்கான செயலமர்வு இம்மாத நிறைவுப் பகுதியிலும், அதனைத் தொடர்ந்து ஆசிரியர்களுக்கான செயலமர்வும் நடாத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. (12)

# கணக்காளர் பதவிக்கு விண்ணப்பங்கோரல்

(யாழ்ப்பாணம்)

தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைச்சர் சபையில் உள்ள கணக்காளர் பதவிக்கான வெற்றிடத்துக்கு இலங்கை குடிமக்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப்பதவிக்கு விண்ணப்பம் செய்யவிரும்புவோர் சுயவிபரக்கோவையுடன், விண்ணப்ப கடிதத உறையின் இடது பக்க மேல் மூலையில் கணக்காளர் பதவி, வவுனியா என்று எழுதி கருத்திட்டப்பணிப்பாளர், ஆ.அ.வ. உதவிபெற்ற வரண்ட வலய நகர்ப்புற நீர் மற்றும் சுகாதாரவசதிகள் கருத்திட்டம், 68 ஈபர்ட்லேன், கல்தே முல்ல, மொரட்டுவ என்னும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் 2011.01.21ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படவேண்டும்.

கல்வித்தகமை, பொது நிபந்தனைகள் தெரிவு முறைபற்றிய விபரங்களை தினமுரசு அலுவலகத்தில் பார்வையிடலாம்.

# நுளம்பு, இலையான் பெருக்கம் யாழ். குடாநாட்டில் தாராளம்

(யாழ். நிருபர்)

யாழ். குடாநாட்டில் நுளம்பு மற்றும் ஈக்களின் (இலையான்) பெருக்கம் தற்போது அதிகரித்துக் காணப்படுகின்றன.

தாழ்வான பிரதேசங்களில் தேங்கி நிற்கும் மழைவெள்ளத்திலும் மற்றும் கழிவு நீர் ஓடும் வடிகால் வாய்களில் இருந்தும் இந்த நுளம்பு மற்றும் ஈக்கள் பெருகுவதாகச் சுகாதாரப் பகுதியினர் தெரிவித்தனர்.

இந்த நுளம்புப் பெருக்கத்தினால் தொற்று நோய்கள் பரவலாம் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

இந்த நுளம்பு மற்றும் ஈக்களை கட்டுப்படுத்துவதற்கு சுகாதாரப் பகுதியினர் எந்தவித நடவடிக்கைகளையும் மேற்கொளளவில்லை என்று மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். (18)

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி பரிசளிப்பு விழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு கல்லூரி மத்தியூஸ் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ.ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக டாக்டர் ஏ.இ.ஏ. ஜோசப், டாக்டர் திருமதி திரேசா ஜோசப் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினராக இலங்கை யூனியன் வங்கியின் பிரதித்தலைவர் அலெக்ஸ் லோவெல் கலந்துகொள்ளவுள்ளார். (எஸ்)

## புதிய செயலாளர்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபையின் புதிய செயலாளராக கொன்ஸ்ரன்ரைன் ஜக்சீல் கடந்த 1 ஆம் திகதி தொடக்கம் நியமிக்கப்பட்டுக் கடமையைப் பொறுப்பேற்றுக் கொண்டுள்ளார். (11)




அண்மையில் நடைபெற்ற காரைநகர் பெரியமலை சிறுவர் பூங்கா திறப்பு விழாவில் சிறுவர் நன்னடத்தை பராமரிப்பு சேவைகள் திணைக்கள ஆணையாளர் ரி.விஸ்வரூபன் உரையாற்றுவதையும், அருகில் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி மற்றும் விருந்தினர்களைக் காணலாம். (50)

# சாஸ்திரிகள் என்ற போர்வையிலும் குடாநாட்டில் மோசடி ஆசாமிகள்

(யாழ்.நிருபர்)

சாஸ்திரம் சொல்கின்றோம் என்று கூறிவிட்டு, திருட்டு நடவடிக்கையிலும் இந்த மோசடிச் சாஸ்திரிமார் ஈடுபட்டு வருவதால் மக்கள் அவதானமாக இருக்க வேண்டும் என்று அறிவுறுத்தப் பட்டுள்ளது.

மலையகப் பகுதியிலிருந்து யாழ் வருகை தரும் குறவர்கள் சிலர், குடாநாட்டின் கிராமப் புறங்களுக்குச் சென்று மக்களுக்கு சாஸ்திரம் சொல்கிறோம், கைரேகை பார்த்துப் பலன் சொல்லலாம் என்று பொய் வார்த்தைகளைக் கூறி, மோசடிசெய்து நிதியைக் கறந்து செல்கின்றனர்.

இப்படிப்பட்ட மோசடி சாஸ்திரிமார் கடந்த வாரத்தில் நீர்வேலிப் பகுதியில் வீதியோரத்தில் நின்ற கோழிகளுக்கு அரிசியை எறிந்து பிடிப்பதற்கு முயற்சித்துள்ளனர்.

ஆகவே, மக்கள் இப்படிப்பட்ட மோசடிச் சாஸ்திரிமாரிடம் ஏமாற வேண்டாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (18)

## இன்றைய பலன்

(11.01.2011 செவ்வாய்க்கிழமை)

**பஞ்சாங்கக் குறிப்புகள்**

விகிர்தி மார்கழி 27

இராகுகாலம்3.33-5.03, சுபநேரம்11.03-12.33, புரட்டாதி உத்தரட்டாதி பி.ப 5.26 வரை, ஸப்தமி பி.இ.2.26 வரை, அமிர்த சித்தம்.

கெர்ப்போட்ட முடிவு 3.23

இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது

-ஆதினி-

**மேடம்:**- சுபநிகழ்வில் கலத்தல், பணச் செலவு, காரிய வெற்றி.

**ரிஷபம்:**- காரியத் தடை, பணமுடை, பயணம்.

**மிதுனம் :**-வெளிநாட்டுச் செய்தி, பணவரவு, மனைவி வழி உதவி.

**கடகம்:**-தனச்சேர்க்கை, தொழிலால் இலாபம், மேலதிகாரி உதவி.

**சிம்மம்:**- பிதாவழியால் தனவரவு, சுபச்செலவு, காரிய சித்தி.

**கன்னி :**- புத்திரர் உதவி, மதிக்கப்படுதல், வெளிநாட்டு உதவி.

**துலாம் :**- உடல்நலம் பாதிப்பு, இனசனபந்துக்கள் வெறுப்பு, தனச்சேதம்.

**விருச்சிகம்:**- நினைத்த காரியச் சித்தி, பெரியோர் உதவி, கால்நடையால் இலாபம்.

**தனுசு:**- வியாபார விருத்தி, வெளிநாட்டுப் பொருள் சேர்தல், விருந்துணவு.

**மகரம்:**- மனக்குழப்பம், பணமோசடியில் ஈடுபடல், அவமானம்.

**கும்பம் :**- பொருட்சேர்க்கை, பகைவர் நேசம், கொண்டாட்டம்.

**மீனம்:**- தொழில் விருத்தி, நண்பர் உதவி, தனச்சேர்க்கை.

# நிலையான சமாதானத்தை ஏற்படுத்த சரியான திட்டம் வகுக்கப்படவேண்டும்

## அரசு மீது குற்றம் சுமத்துகிறார் சந்திரிக்கா


(கொழும்பு)

நாட்டில் நிலையான சமாதானத்தை ஏற்படுத்த சரியான திட்டம் வகுக்கப்பட வேண்டுமென முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார். மிக நீண்ட இடைவெளிக்குப் பின்னர் முன்னாள் ஜனாதிபதி ஊடகங்களுக்கு உரையாற்றியுள்ளார்.

நாட்டை அபிவிருத்தி செய்வது குறித்தோ அல்லது நிலையான சமாதானத்தை ஏற்படுத்துவது குறித்தோ அரசாங்கம் கரிசனையுடன் செயற்படவில்லை என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

அநேகமான அரசாங்க நிறுவனங்களில் பாரியளவு ஊழல் மோசடி நடைபெற்று வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

தற்போதைய அரசாங்கம் மேற்கொண்ட ஆக்கபூர்வமான ஒரே விடயம், யுத்தத்தை முடிவுறுத்தியதாகும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.



தேசிய வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீடுகளில் 40 வீதம் வீண் விரயமாக்கப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

ஊழல் மோசடிகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டால் நாட்டில் பாரிய அபிவிருத்தியை ஏற்படுத்த முடியும் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# போலி தேசிய அடையாள அட்டை தயாரித்த சந்தேக நபர்கள் கைது

(கொழும்பு)

போலியான முறையில் தேசிய அடையாள அட்டைகளைத் தயாரித்துவந்த நபர் நேற்று கண்டிப் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த சந்தேக நபர் ஒருவர் அளித்த வாக்கு மூலத்திற்கு அமையவே போலியான முறையில் தேசிய அடையாள அட்டைகளைத் தயாரித்து வந்த நபர்களைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்தச் சந்தேக நபர்கள், கண்டிப் பிரதேசத்தில் 15 நிமிடங்களுக்குள் போலியான முறையில் அடையாள அட்டைகளைத் தயாரித்து விநியோகம் செய்து வந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இராணுவம், ஜனாதிபதிப் பாதுகாப்புப் பிரிவு மற்றும் ஏனைய அரச நிறுவனங்களில் கடமையாற்றுவதற்கு விண்ணப் பம் செய்வோருக்கு இவ்வாறு போலியான தேசிய அடையாள அட்டைகள் விநியோகம் செய்யப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய மூன்று பேரைக் காவல்துறையினர் கைது செய்துள்ளனர், பிரதான சந்தேக நபர் மேலும் பல மோசடிகளுடனும் தொடர்புடையவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# பொலிசாருக்கு எதிரான அடிப்படை உரிமை மீறல் மனு அதிகரிப்பு!

(கொழும்பு)

கொழும்பு நீதிவான் நீதிமன்றில் கடந்த வருடம் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் குறைவடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

2010ஆம் ஆண்டு கணிப்பீட்டின்படி அடிப்படை உரிமை மீறல் மனு 669 மாத்திரமே தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனினும் 2009 ஆம் ஆண்டு அதன் எண்ணிக்கை 1010ஆகக் காணப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது.



மேலும் கடந்த வருடம் பொலிஸாருக்கு எதிராகவே அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் அதிகம் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

அதுதவிர கல்வி, அரச நிறுவனங்கள் மற்றும் உள்ளூராட்சி சபை நிறுவனங்களுக்கு எதிராகவும் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

தாக்கல் செய்யப்பட்ட மனுக்களுள் பலவற்றிற்கு தீர்ப்புகள் வழங்கப்பட்டுள்ளதுடன், சில எதிர்காலத்தில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# சிரேஷ்ட உறுப்பினர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களில் எந்தவித உண்மையுமில்லை

## சுகாதார அமைச்சர் சிறிசேன

(கொழும்பு)

கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களில் உண்மையில்லை என சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி, பிரதமர் மற்றும் தாம் உள்ளிட்ட பல சிரேஷ்ட உறுப்பினர்களுக்கு உரிய மரியாதை அளிக்கப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அமைச்சரவையில் அமைச்சர்களாகவும், பிரதி அமைச்சர்களாகவும் பல சிரேஷ்ட உறுப்பினர்களுக்கு சந்தர்ப்பம் அளிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

சிலர் அரசியல் லாபங்களை ஈட்டிக் கொள்வதற்காகப் பொய்யான பிரசாரங்களை மேற்கொண்டு வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் ஏனையவர்களை விடவும் பொறுப்புணர்ச்சியுடன் செயற்பட வேண்டுமென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சிரேஷ்ட அமைச்சர்களுக்கு காரியாலயம் வழங்கப்படாமை தொடர்பில் குற்றம் சுமத்த முடியாது எனத்தெரிவித்த அவர் திறமையுள்ளவர்கள்



வீட்டில் இருந்து கொண்டே கடமையாற்றுவார்கள் என் சுடடிக் காட்டியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி கடுமையான விமர்சனங்களை வெளியிட்ட போதிலும் எதிர் வரும் தேர்தலிலும் படுதோல்வி அடைவது உறுதியென அவர் குறிப்பிட்டுள்ளார்.

# கிழக்கில் அத்தியாவசிய பொருட்களுக்கு தொடரும் தட்டுப்பாடு; மக்கள் அவலம்



(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாணத்தில் கடந்த இரண்டு நாட்களாகத் தொடர்ந்து பெய்துவரும் கடும் மழையினால் பல லட்சம் மக்கள் நேரடியாகப் பாதிப்புக்குள்ளாகியிருக்கிறார்கள். இந்நிலையில் இவர்களுக்கான சமைத்த உணவுகளை வழங்குவதில் பெரும் சிக்கல் நிலவுவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பாதைகள் பல மூடப்பட்டுள்ள நிலையில் மட்டக்களப்புக்கான விநியோகங்களிலும் பாரிய பின்னடைவு ஏற்பட்டுள்ளது. இதன்காரணமாக மரக்கறி வகைகள் மற்றும் அத்தியாவசிய பொருட்களைக் கொள்வனவு செய்வதில் பெரும் சிக்கல்நிலை காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தரைவழிப் பாதைகளில் பாரிய வெள்ளம் பாய்ந்தோடுவதால் வாகனங்களில் அத்தியாவசிய பொருட்களை எடுத்து வருவதில் தடங்கல்கள் ஏற்பட்டுள்ளதாகவும் மட்டக்களப்பு வியாபாரிகள் தெரிவிக்கின்றனர். எனவே இதற்கு மாற்று நடவடிக்கைகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் மேற்கொள்ள வேண்டும் எனவும் பாதிக்கப்பட்டவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# இல்லாத கணவனுக்காக ஒய்வூதியம் பெற்ற மனைவி!

## கெப்பிற்றிக் கொலாவையில் சம்பவம்

(நமது நிருபர்)

2007ஆம் ஆண்டு இறந்து போன இராணுவச் சிற்பாய் ஒருவரின் மனைவி தானே என்று கூறி போலியான திருமணச் சான்றிதழைச் சமர்ப்பித்து அவரது ஓய்வூதியத்தை பெற்று வந்தமை கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்து அப் பெண்ணைப் பொலிஸார் கைது செய்து கெப்பிட்டிக் கொலாவ நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

இவ் வழக்கை விசாரணை செய்த கெப்பிட்டிக் கொலாவ நீதிவான் போலியான ஆவணங்களைச் சமர்ப்பித்தமைக்கும், மற்றும் மூன்று குற்றச்சாட்டுகளுக்கும் சேர்த்து குறித்த பெண்ணுக்கு 18 மாதச் சிறைத் தண்டனையும், மேலும் ஒவ்வொரு குற்றத்துக்கும் தண்டப் பணமாக தலா 1500 ரூபா செலுத்த வேண்டும் எனவும் குற்றப்பணம் செலுத்தத் தவறும் பட்சத்தில் மேலும் ஆறு மாதம் சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டும் எனவும் தீர்ப்பளித்தார்.

மேற்படி பெண்ணுக்கு போலியான திருமணச் சான்றிதழைத் தயாரித்துக் கொடுத்த பதிவாளரும் இவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ளார். ஆனால் மேற்படி பெண் இத் தீர்ப்பை எதிர்த்து மேன் முறையீடு செய்வார் என்று அவருக்கு உடந்தையாக இருந்த பதிவாளர் கூறியுள்ளார். எனவே மேன்முறையீட்டுத் தீர்ப்பு வரும்வரை கெப்பிட்டிக் கொலாவ நீதிமன்று வழங்கியுள்ள தண்டனை தள்ளிவைக்கப்பட்டுள்ளது.

# கல்முனையில் கடலுக்கு மீன்பிடிக்க சென்ற மூவரில் ஒருவர் மாயம்

(கல்முனை)

கல்முனை பெரியநீலாவணை கடற்பரப்பில் நேற்று முன்தினம் மாலை மீன்பிடிக்கச் சென்ற மூவரில் ஒருவர் கடலலையில் அடித்துச் செல்லப்பட்டுள்ளார். கல்முனை நாதன் ஸ்டோர்ஸ் வீதியைச் சேர்ந்த மூவரே இவ்வாறு மீன்பிடித் தொழிலுக்குச் சென்றுள்ளனர்.

எனினும் இவர்கள் சென்ற படகு இடையில் விபத்துக்குள்ளானதை அடுத்து கடற்கரையிலிருந்து மற்றுமொரு படகில் சென்ற சிலர் அவர்களைக் காப்பாற்றும் முயற்சியில் ஈடுபட்டனர்.

எனினும் படகில் இருந்த இருவரை மாத்திரம் காப்பாற்ற முடிந்ததாகவும், ஒருவர் அலையில் அடித்துச் செல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

56 வயதுடைய முருகபிள்ளை நவராஜா என்பவரே அலையில் அடித்துச் செல்லப்பட்டவராவார். அவருடைய சடலம் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. கல்முனைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# முன்னாள் அமைச்சர் சரத் சந்திர ராஜகருணா காலமானார்

(கொழும்பு)

முன்னாள் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான சரத் சந்திர ராஜகருணா நேற்று திங்கட்கிழமை காலை காலமானார்.



1977ஆம் ஆண்டு முதன் முதலில் நாடாளுமன்றத்தில் பிரவேசித்த இவர், ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்த்தனவின் அமைச்சரவையில் அமைச்சராகவும் இருந்தார்.

# விளையாட்டுத்துறையை மேலும் வலுப்படுத்த எமது ஒத்துழைப்புகள் என்றென்றும் இருக்கும்

## கூடைப்பந்து இறுதிப் போட்டி நிகழ்வில் அமைச்சர்

(யாழ்ப்பாணம்)



யாழ். மாவட்டத்தில் விளையாட்டுத்துறையைச் சிறப்பான முறையில் மேலும் வலுப்படுத்த எமது பூரண ஒத்துழைப்புக்கள் என்றென்றும் இருக்குமென ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா அவர்கள் தெரிவித்தார்.

யாழ் மத்திய கல்லூரியில் நேற்று முன்தினம் மின்னொளியில் நடைபெற்ற கூடைப்பந்தாட்ட இறுதிப் போட்டிகளில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தொடர்ந்தும் பேசுகையில், மின்னொளியில் கூடைப் பந்தாட்டம் மற்றும் கால்பந்தாட்டப் போட்டிகளை நடாத்த வேண்டுமென்பது எனது நீண்ட நாள் ஆசை என்பதுடன் அது இன்று கைகூடியும் உள்ளமை மகிழ்ச்சியளிக்கிறது. விளையாட்டுத் துறையை மென்மேலும் வளர்த்தெடுப்பதற்கான எமது பூரண ஒத்துழைப்பு என்றென்றும் இருக்கும்.

கூடைப்பந்தாட்டத்திற்கெனப் பிரத்தியேக மைதானம் அமைக்கப்பட முழுமையான நடவடிக்கை எடுக்கப்படுமென்பதுடன் யாழ் மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்ட மைதானத்திற்கான மின்னொளியை மேலும் அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் அவர் தெரிவித்தார்.

# பருத்தித்துறை லீக் அணிக்கு பல தரப்பிடமிருந்தும் பாராட்டு



(யாழ்ப்பாணம்)

இலங்கை லீக் அணிகளுக்கிடையிலான கால்பந்துத் தொடரில் கிண்ணத்தை வென்ற பருத்தித்துறை லீக் அணிக்கு யாழ். மாவட்ட விளையாட்டுத்துறையைச் சேர்ந்த அதிகாரிகள் மற்றும் அரசியல்வாதிகள், அரச, அரச சார்பற்ற அதிகாரிகள் போன்றோர் பாராட்டுக்கள் தெரிவித்து வருகின்றனர்.

கொழும்பில் நடைபெற்ற இலங்கை லீக் அணிகளுக்கிடையிலான கால்பந்து இறுதிப் போட்டியில், கொழும்பு சிவில் பாதுகாப்பு அணியை எதிர்த்து வெற்றி கொண்ட பருத்தித்துறை லீக் அணி, 1974ஆம் ஆண்டுக்குப் பின்னர் யாழ். மாவட்டம் சார்பாக கிண்ணத்தைச் சுவீகரித்த அணி என்ற சிறப்பையும் பெற்றுள்ளது.

மேற்படி போட்டியில் வெற்றி பெற்றதை அடுத்து பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக் அணிக்கு பாராட்டுக்கள் குவிந்தவண்ணமுள்ளது.

இதேவேளை, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, அமைச்சர் டக்ளஸ் ஆகியோர் நேரில் வாழ்த்துத் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

## கழகங்களுக்கிடையிலான கூடைப்பந்தாட்டம்

# சென்றலைட்ஸ், பமிலியன்ஸ் அணிகள் சம்பியன்





(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்ட ஆண், பெண் அணிகளுக்கிடையிலான கூடைப்பந்தாட்ட இறுதிப் போட்டிகளில் சென்றலைட்ஸ் மற்றும் பமிலியன் அணிகள் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டன.

யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கத்தினால் நடாத்தப்பட்ட மாவட்டக் கழகங்களுக்கிடையிலான இந்தப் போட்டி யாழ். மத்திய கல்லூரியின் கூடைப்பந்தாட்ட மைதானத்தில் நேற்று முன்தினம் இரவு மின்னொளியில் நடைபெற்றது. இதில் முதலில் நடைபெற்ற பெண்களுக்கான இறுதிப் போட்டியில் கே.சி.சி. அணியும், பமிலியன்ஸ் அணியும் மோதின. இதில் அபார மாக விளையாடி பமிலியன்ஸ் அணி கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

அடுத்து நடைபெற்ற ஆண்களுக்கான இறுதிப் போட்டியில் சென்றலைட்ஸ் 'ஏ' அணியும், ஜொலிஸ்ரார் அணியும் மோதின. இதில் மிகவும் சிறப் பாக விளையாடி சென்றலைட்ஸ் அணி கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

இதனைத் தொடர்ந்து பரிசளிப்பு வைபவம் நடைபெற்றது. இதில் வெற்றி பெற்ற அணிகளுக்கும் வீர வீராங்கனைகளுக்குமான வெற்றிக் கிண்ணங்களையும், பணப்பரிசில்களையும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் வழங்கி வைத்தார். தொடர்ந்து 2010 ஆண்டுக்கான சிறந்த கூடைப்பந்தாட்ட வீர, வீராங்கனைகள், பயிற்றுவிப் பாளர் உள்ளிட்ட துறைசார்ந்தோருக்கு ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் யாழ் மாநகர முதல்வர் யோகேஸ்வரி பற்குணராஜா மற்றும் ரில்கோ விருந்தினர் விடுதி உரிமையாளர் ராஜ்குமார் ஆகியோர் பரிசில்களை வழங்கி வைத்தனர்.

இந்நிகழ்வில் பாடசாலை அதிபர்கள் ஆசிரியர்கள் விளையாட்டுத் துறைசார்ந்தோர் நலன்விரும்பிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.


### கௌரவிக்கப்பட்டோர் விபரம் வருமாறு:

பாடசாலை மட்டப் பெண்கள் பிரிவு, திருக்குடும்பக் கன்னியர் மடப்பாடசாலையைச் சேர்ந்த ஆர். பெனான்சி, ஆண்கள் பிரிவில் யாழ். மத்திய கல்லூரியைச் சேர்ந்த எஸ். பிரசாத்மன் ஆகியோர் சிறந்த வீரர்களுக்கான விருதினைப் பெற்றனர்.

கழக மட்டத்தில் பெண்கள் பிரிவில் பமிலியன் அணியைச்சேர்ந்த ஆர். தனுஷா, ஆண்கள் பிரிவில் ஜொலிஸ்ரார் அணியைச் சேர்ந்த எஸ். வாகீசன் ஆகியோர் சிறந்த வீரர்களுக்கான விருதினையும் பெற்றனர்.

அத்துடன், முன்னாள் கூடைப்பந்தாட்ட வீராங்கனையான திருமதி மல்லிகா மற்றும் தெய்வீகன், சிறந்த நடுவராக எட்வேட் கென்றி, சிறந்த பயிற்றுவிப்பாளராக என். பிரசன்னா, சிறந்த பார்வையாளராக அருணாசலம் ஆகியோர் இந்நிகழ்வில் கௌரவிக்கப்பட்டனர்.




**கட்டாரில் நடைபெற்ற ரென்னிஸ் தொடரின் வெற்றிக் கிண்ணத்தை சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரர் கைப்பற்றிக் கொண்டார்.**

**கட்டாரில் நடைபெற்ற இந்த இறுதிப் போட்டியில் ரஷ்யாவின் டேவிடென்கோவை எதிர்கொண்ட பெடரர் 6-3, 6-4 என்ற நேர் செட்டில் வெற்றி பெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டார்.**

**வெற்றி குறித்து கருத்துத் தெரிவித்த பெடரர், ஆண்டின் தொடக்கம் வெற்றியுடன் தொடங்கியுள்ளதாகவும், இந்த ஆண்டு சிறப்பான ஆண்டாக அமையும் என்ற நம்பிக்கை உள்ளதாகவும் தெரிவித்தார்.**

# ஆஸியுடனான ஒரு நாள் தொடர் நல்ல பயிற்சிக்களமாக அமையும்

(சிட்னி)





அவுஸ்ரேலிய அணியுடனான ஒரு நாள் தொடர் என்பது எங்களுக்கான உலகக் கிண்ண போட்டித் தொடருக்கான பயிற்சிக் களமாகவும், தயாரிப்புத் தொடராகவும் அமையுமென இங்கிலாந்து பயிற்றுவிப்பாளர் அன்டிப் பிளவர் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது, விரைவில் உலகக் கிண்ணத் தொடர் நடைபெறவுள்ள நிலையில், இத்தொடர் எங்களுக்கான நல்ல பயிற்சிக் களமாகவே கொள்ளவேண்டும். இது அணியை மீள ஒழுங்குபடுத்தவும், துடுப்பாட்ட வீரர்களின் ஆட்டத் திறனை மேலும் வலுப்படுத்திக் கொள்ளவும் உதவும். 3-1 என்ற கணக்கில் ஆஷஸ் கிண்ணத்தை நாம் கைப்பற்றியிருந்தோம். ஏழு போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரைக் கைபற்றிக்கொள்ளும் நோக்கம் எம்மிடம் உள்ளதுதான். இருப்பினும், இத்தொடரில் சில தந்திரோபயங்கள், திட்டமிடல்களை பரிசோதிப்பதற்கான களமாகவே பார்க்கின்றோம். எனவே, உலகக் கிண்ணத் தொடரில் எமது அணி சிறப்பான முறையில் செயற்படும் என்ற நம்பிக்கை உள்ளது. சகல துறைகளிலும் மிளிரக்கூடிய வீரர்கள் எமது அணியில் உள்ளமையால் அதற்கான வாய்ப்பு எமக்கு இருக்கின்றது என்றே உணர்கின்றேன் என்றார்.

# ஒரு நாள் போட்டிக்கான அணியில் இடம்பிடிப்பேன் என்கிறார் ரோகித்

(டர்பன்)



தென்னாபிக்க ஆடுகளங்களில் ஆடிய அனுபவங்கள் எனக்கு இருக்கின்றது. ரி-20 போட்டியில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய எனக்கு, ஒரு நாள் அணியில் நிச்சயம் இடம்கிடைக்கும் என்ற நம்பிக்கை இருக்கின்றது. இவ்வாறு தென்னாபிரிக்காவுக்கெதிரான ரி-20 போட்டியில் ஆட்டநாயகன் விருது வென்ற ரோகித் சர்மா தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது, தென்னாபிரிக்கப் பயணத்தில் தொடக்கத்திலேயே எனது ஆட்டம் சிறப்பாக இருந்தது மகிழ்ச்சி அளிக்கிறது. இந்த சிறப்பான ஆட்டம் மூலம் ஒருநாள் போட்டிக்கான 11 பேர் கொண்ட அணியில் இடம் கிடைக்க நல்ல வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

20 ஓவர் உலக கிண்ணப் போட்டியில் இங்கு விளையாடி இருக்கிறேன். இங்குள்ள மைதானங்களில் ஆடுவது சாதாரணமானது இல்லை. திட்டமிட்டு வெவ்வேறு கோணங்களில் விளையாடினேன். கடந்த ஆண்டு எனக்குச் சிறப்பானதாக அமையவில்லை.–இந்த ஆண்டு நிச்சயம் சிறப்பானதாக அமையும் என்றார்.

# இந்திய எல்லைப் பகுதிகளுக்குள் அத்துமீறி நுழையும் சீனப்படையினர்

கடந்த ஆண்டு இந்திய எல்லைக்குள் அத்துமீறி நுழைந்த சீனப் படையினர், கட்டுமானப் பணியில் ஈடுபட்டு இருந்த ஒருவரை மிரட்டிய விவகாரம் தற்போது வெளிச்சத்திற்கு வந்துள்ளது.

சீனப்படையினர், இந்திய எல்லைப் பகுதிக்குள் அத்துமீறி நுழைவது அடிக்கடி நடந்து வருகிறது. கடந்த 2009 ஆம் ஆண்டு ஜுன் மற்றும் ஜுலை மாதங்களில், இந்திய எல்லைப்பகுதிக்குள் நுழைந்த சீனப்படையினர், லடாக் பகுதியில் சாலை கட்டுமானப் பணியில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்களை மிரட்டியுள்ளனர்.

பின்னர், அதே ஆண்டு நவம்பர் மாதம் உள்ளே நுழைந்த சீனப்படையினர் இந்திய எல்லைப் பகுதியில் சில வகைப் பயிற்சிகளை மேற்கொண்டனர். அதனுடன், லடாக் பகுதியில் சர்வதேச எல்லைப் பகுதியைக் கடந்து வந்த சீனர்கள் இந்தியாவின் தூண்கள் மற்றும் பாறைகளில் சிவப்பு வண்ணங்களை அடித்துச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் சர்வதேச அளவில் பெரும் சர்ச்சையை உண்டாக்கியது. சீனாவின் இந்த நடவடிக்கைகளுக்கு, இந்தியா கடும் கண்டனம் தெரிவித்தது.

கடந்த ஆண்டு சீனப் படையினர், கான்ட்ராக்டர் ஒருவரை மிரட்டியது தொடர்பான விடயங்களை தற்போது, காஷ்மீர் மாநில அதிகாரிகள் சிலர் விரிவாகக் கூறியுள்ளனர்.

சீனாவின் துணை இராணுவப் படையான மக்கள் விடுதலை இராணுவத்தைச் சேர்ந்தவர்களும், சீன இராணுவத்தினர் சிலரும் காஷ்மீரில் உள்ள டெம்சேக் பிராந்தியப் பகுதிக்குள் கடந்த செப்ரெம்பர், ஒக்ரோபர் மாதங்களில் அத்துமீறி நுழைந்தனர்.

கட்டுப்பாட்டு எல்லைக் கோட்டை ஒட்டிய கேம்பீர் பகுதிக்கு, மோட்டார் சைக்கிளில் வந்த இவர்கள், அங்கு பயணிகளுக்கான ஓய்வறை கட்டும் கட்டுமானப் பணியில் ஈடுபட்டிருந்த கான்ட்ராக்டர் ஒருவரிடம், அந்தப் பணிகளை உடனடியாக நிறுத்தும்படி கூறி மிரட்டினர்.

பின்பு, அவர்கள் சீன அரசுக்கு ஆதரவான கோஷங்களை எழுப்பினர். இவ்வாறு சீனப் படையினர் மிரட்டியதும், பீதியடைந்த இந்தியக் கட்டுமானத் தொழிலாளர்கள் அருகேயுள்ள இந்திய இராணுவ முகாமிற்குச் சென்று உதவி



கோரியுள்ளனர். உடனே விரைந்து செயற்பட்ட இராணுவத்தினர், கட்டுமானப் பணியைத் தொடர வேண்டாம் என்று காஷ்மீர் மாநில அரசிடம் கேட்டுக் கொண்டனர்.

கட்டுப்பாட்டு எல்லைக் கோட்டுப் பகுதியில் இருந்து 50 கி.மீ. தொலைவில் எந்தவொரு கட்டுமானப் பணியை மேற்கொள்ள வேண்டும் என்றாலும், அதற்கு இராணுவ அமைச்சகத்தின் அனுமதி பெற வேண்டும் என்று கூறியதாக காஷ்மீர் மாநில அதிகாரிகள் சிலர் தெரிவித்தனர்.

இருப்பினும், இது தொடர்பாக இராணுவ அதிகாரிகள் யாரும் எவ்வித பதிலும் அளிக்கவில்லை. அவர்கள் வாயைத் திறக்கவே மறுத்துவிட்டனர் என்று செய்திகள் வெளியாகியுள்ளன.

## மின் உயர்த்தி அறுந்தது ஐந்துபேர் பலியாகினர்

மும்பையில் கட்டுமானப் பணி நடந்து கொண்டிருக்கும் ரஸ்தோம்ஜீ டவர்ஸில் அமைக்கப்பட்டிருந்த மின் உயர்த்தி (லிப்ட்) அறுந்து விழுந்ததில் 5 தொழிலாளர்கள் பலியாகியுள்ளனர்.

மேலும் ஒருவர் படுகாயம் அடைந்தார். நேற்றுப் பிற்பகல் நடந்த இந்தச் சம்பவத்திற்கான காரணம் தெரியவில்லை என்று தீயணைப்புத் துறைத் தலைமை அதிகாரி யு.கே.டட்கரே தெரிவித்தார்.

அங்கிருந்த பொதுமக்களும், பொலிஸாரும் காயமடைந்தவர்களை அருகில் இருந்த சயன் மருத்துவமனையில் சேர்த்துவிட்ட பின்புதான் தீயணைப்புத் துறைக்குத் தகவல் கொடுத்ததாக டட்கரே மேலும் தெரிவித்தார்.

மத்திய மும்பையில் உள்ள ரூயா கல்லூரிக்கு எதிரில் 25 மாடிக் கட்டடமான ரஸ்தோம்ஜீ டவர்ஸ் கட்டப்பட்டு வருகிறது. அதில் கட்டுமானப் பணிக்காக அமைக்கப்பட்ட லிப்டில் 6 தொழிலாளர்கள் ஏறினர். திடீர் என்று அது கீழே விழுந்தது என்று பொலிஸார் கூறினார்கள்.

இந்த வழக்கில் கட்டடத்தின் பில்டர், கான்ட்ராக்டர் மற்றும் பராமரிப்புக் கண்காணிப்பாளர் உள்ளிட்ட 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.


# பொருளாதார வளர்ச்சியில் இந்தியா 2050 ஆம் ஆண்டில் முதலிடம் பிடிக்குமாம்

## பொருளியல் வல்லுநர்களின் கண்டுபிடிப்பு இது

(சென்னை)

ஒரு நாட்டின் பொருளாதாரம், அந்நாட்டு மக்களின் வாங்கும் சக்தியை அடிப்படையாகக் கொண்டு நிர்ணயிக்கப்படுகிறது. அந்த வகையில் 2009ஆம் ஆண்டில் இந்தியா 4ஆம் இடத்தில் இருந்தது.

வேலைக்குச் செல்லும் இளைஞர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. இதனால் 2050 ஆம் ஆண்டில் வாங்கும் சக்தியில் 2ஆம் இடத்தைப் பிடிக்கும். இதன்மூலம் பொருளாதாரத்தில் அமெரிக்காவைப் பின்னுக்குத் தள்ளி இந்தியா 2 ஆம் இடத்தைப் பிடிக்கும். பொருளாதாரத்தில் இப்போது முதலிடத்தில் உள்ள அமெரிக்காவை 2020ஆம் ஆண்டுக்குள் சீனா முந்திவிடும்.




சீனாவின் ஒரு குழந்தைத் திட்டத்தால் இந்தியாவில் இளைஞர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. எனவே, 2050 ஆம் ஆண்டுக்குப் பிறகு சீனாவையும் பின்னுக்குத் தள்ளி இந்தியா முதலிடத்தைப் பிடிக்க வாய்ப்பு உள்ளது.

# இலவச 10 இலட்சம் கலர் ரி.வி வழங்க மீண்டும் தமிழக அரசு நடவடிக்கை எடுப்பு

(சென்னை)

இலவச கலர் ரி.வி.வழங்கும் திட்டத்தின் கீழ் பொதுமக்களுக்கு வழங்குவதற்காக மேலும் 10 லட்சம் கலர் ரி.விக்களைத் தமிழக அரசு கொள்முதல் செய்கிறது. இலவச தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்துவது குறித்து அமைக்கப்பட்ட சட்டமன்றக் கட்சிகளின் பிரதிநிதிகள் அடங்கிய குழு ஒவ்வொரு முறையும் கூடி, அரசு கலர் ரி.விக்கள் கொள்முதல் செய்வது குறித்து முடிவெடுத்து வருகிறது.

இதன்படி இந்தக் குழுவின் 21ஆவது கூட்டம் புதிய தலைமைச் செயலகத்தில் நேற்று நடந்த கூட்டத்துக்கு முதல்வர் கருணாநிதி தலைமை வகித்தார். தி.மு.க.சார்பில் துணை முதல்வர் மு.க.ஸ்டாலின், சட்டமன்றக் கட்சிகளின் பிரதிநிதிகள் யசோதா (காங்கிரஸ்), அப்துல் பாசித் (இந்திய யூனியன் முஸ்லிம் லீக்), ஜெகன் மூர்த்தி (புரட்சி பாரதம்), ரவிக்குமார் (விடுதலை சிறுத்தைகள்), கோவிந்தசாமி (எம்.எல்.ஏ.) ஆகியோர்



கலந்துகொண்டனர்.

கடந்த சட்டமன்றத் தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில் 2006 இல் அண்ணா பிறந்த நாள் அன்று இலவச வர்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டம் தொடங்கப்பட்டது. இதுவரை 5 கட்டங்களாக ஒரு கோடியே 62 லட்சத்து 80 ஆயிரம் தொலைக்காட்சிப் பெட்டிகள் ஒளிவு மறைவற்ற முறையில் கொள்முதல் செய்யப்பட்டு ஒரு கோடியே 57 லட்சத்து 25 ஆயிரம் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

# அ.தி.மு.க எம்.எல்.ஏக்கள் ஒன்பது பேர் இடைநிறுத்தம்



(சென்னை)

சட்டப்பேரவையில் ஆளுநர் உரையின்போது ஏற்பட்ட கூச்சல் குழப்பத்தைக் காரணம் காட்டி, அ.தி.மு.க உறுப்பினர்கள் 9 பேரை சட்டப் பேரவை நடவடிக்கைகளில் இருந்து இடைநிறுத்தியுள்ளதாக சபாநாயகர் அறிவித்தார்.

நேற்றுக் காலை சட்டப் பேரவைத் தொடரக்கூடிய போது, கடந்த வெள்ளி அன்று ஆளுநர் உரை நடைபெற்ற நேரத்தில் கூச்சல் போட்டு ரகளை செய்ததாக, அ.தி.மு.க உறுப்பினர்கள் 9 பேரை, பேரவை நடவடிக்கைகளில் இருந்து இடைநிறுத்தியுள்ளதாக அறிவித்தார் சபாநாயகர்.

பொள்ளாச்சி ஜெயராமன், கே.பாண்டுரங்கன், டி.ஜெயகுமார், திருத்தணி கோஹரி, வேலுமணி, ரவிச்சந்திரன், அக்ரி கிருஷ்ணமூர்த்தி, செந்தில் பாலாஜி, சி.வி.சண்முகம் இவர்கள் 9 பேரும் இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது. இந்தத் தீர்மானத்தை அவை முனைவர் அன்பழகன் கொண்டு வந்தார்.

# கூட்டணிக்காக தொண்டர்களை அடகு வைக்கமாட்டேன்

## மக்கள் உரிமை மீட்பு மாநாட்டில் விஜயகாந் முழக்கம்


தே.மு.தி.க மக்கள் உரிமைமீட்பு மாநாடு சேலத்தை அடுத்த வீராசாமி புதூரில் நேற்று மாலை நடந்தது. அவைத்தலைவர் பண்ருட்டி ராமச்சந்திரன், பொருளாளர் சுந்தர்ராஜன், இளைஞரணிச் செயலாளர் சுதீஷா பிரேமலதா விஜயகாந்த் மற்றும் மாநில நிர்வாகிகள் பேசினர்.

மாநாட்டில் விஜயகாந்த் பேசியதாவது- அத்தியாவசியப் பொருட்கள் விலை உயர்வு, பெட்ரோல், டீசல் விலை உயர்வால் ஏழைகள் பாதிக்கப்பட்டு உள்ளனர். தே.மு.தி.க ஆட்சிக்கு வந்தால் வறுமை ஒழியும். வரும் சட்டசபை தேர்தலில் எந்தக் கட்சியுடன் கூட்டணி வைக்க போகிறேன் என்பதை அறிய காத்திருக்கின்றனர். கூட்டணிப் பிரச்சினையை என்னிடம் விட்டுவிடுங்கள். அதை நான் பார்த்துக்கொள்கிறேன். என்னையும், என் கட்சித் தொண்டர்களையும் யாரிடமும் அடகு வைக்கமாட்டேன.

சில கட்சிகளைப்போல், கூட்டணிக் கட்சியிடம் உங்களை அடிமையாக்க நான் தயாராக இல்லை. நம் படை இல்லாமல் யாராலும் தமிழகத்தில் ஆட்சி அமைக்க முடியாது. உங்களில் நானும் ஒருவன். நீங்கள் இல்லாமல் நான் இல்லை. கட்சியை ஆரம்பித்தபோது, ஏற்கனவே 70 கட்சிகள் இருந்தது. அதில் தே.மு.தி.க 70 பிளஸ் ஒன் என்றும், பத்தோடு பதினொன்று அத்தோடு இதுவும் ஒன்று என்றும் கேலி பேசினர். இப்போது தே.மு.தி.க.தான் நம்பர் ஒன்று. இவ்வாறு விஜயகாந்த் பேசினார்.

# உலகில் அமைதியை நிலைநாட்டுவதற்கு அரபு நாடுகள் ஒத்துழைப்பு வழங்கவேண்டும்

## அமெரிக்க வெளிவிவகார அமைச்சர்



(வொஷிங்டன்)

மத்திய கிழக்கு நாடுகளில் அமைதியை நிலைநாட்ட அரபு நாடுகள் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்றும், இதற்காக உறவைப் பலப்படுப்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் ஹிலாரி கிளிண்டன் கூறியுள்ளார்.

அணு ஆயுதம் தயாரிப்பதாகவும், யுரேனியம் செறிவூட்டுவதாகவும் ஈரான் மீது, அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் குற்றஞ்சாட்டி வருகின்றன.

அந்நாட்டின் மீது ஐ.நா., பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும் என்ற கோரிக்கையும் வலுத்து வருகிறது. ஆனால், ஈரான் இதை மறுத்து வருகிறது.

தனது மின் தேவையை பூர்த்தி செய்வதற்காகவே, யுரேனியத்தை செறிவூட்டி வருவதாகவும், அணு ஆயுதம் தயாரிப்பதற்காக அல்ல என்றும் தெரிவித்துள்ளது. எனினும், ஈரான் ரகசியமாக அணு ஆயுதம் செய்து வருவதாக அமெரிக்காவும், அரபு நாடுகளும் தங்கள் பயத்தைப் பகிர்ந்து கொண்டுள்ளன.

இது தொடர்பாக, விக்கிலீக்ஸ் இணையதளம், ஈரான் மீது சன்னி அரேபிய தலைவர்கள் கொண்டுள்ள பயத்தை வெளியிட்டது. ஈரான் நடவடிக்கைகள் தொடர்பான சர்வதேச பேச்சுவார்த்தை வரும் 21 மற்றும் 22 ஆகிய திகதிகளில் துருக்கி நாட்டில் நடக்க உள்ளன என்றார்.

ஐ.நா., பாதுகாப்பு கவுன்சிலில் நிரந்தர உறுப்பினர்களாக உள்ள அமெரிக்கா, ரஷ்யா, சீனா, பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய நாடுகள், ஈரான் தனது செயற்பாடுகள் குறித்து வெளிப்படையாக விளக்க வேண்டும் என்று வலியுறுத்தும் எனத் தெரிகின்றன.

இந்நிலையில், அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஹிலாரி கிளிண்டன், ஐக்கிய அரபு நாடுகளான கட்டார் மற்றும் ஓமான் நாடுகளுக்குப் பயணம் மேற்கொண்டுள்ளார்.

இதுகுறித்து ஹிலாரி கூறுகையில்-

மத்திய கிழக்கு நாடுகளில் அமைதியை நிலைநாட்டவும், ஈரானுக்கு எதிராக பொருளாதாரத் தடை விதிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளவும் அரபு நாடுகள் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும். இதற்காக, அரபு நாடுகள் தங்கள் உறவை வலுப்படுத்திக்கொள்ள முன்வர வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.




# நாய்க்கறி சமைத்து ருசிபார்த்த ஐவர் பொலிஸாரால் கைதாகினர்



(தைபே)

தைவான் தலைநகர் தைபேயில் 5 பேர் இரண்டு நாய்களைக் கொன்று அதன் மாமிசத்தைச் சமைத்துச் சாப்பிட்டதாக பொலிஸில் முறைப்பாடு ஒன்று கொடுக்கப் பட்டுள்ளது. தைவான் நாட்டு மக்கள் நாய்க்கறி சாப்பிடுவதில்லை எனவும், அங்கு வசிக்கும் சீன வம்சாவளியினர் சிலர் மட்டும் நாய்க்கறி சாப்பிட்டு வந்தனர் என்றும், முதன்முதலாக தைவான் நாட்டினர் நாய்க்கறி சாப்பிட்டதாக முறைப்பாடு ஒன்று கிடைத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இதையடுத்து நாய்க்கறி சாப்பிட்ட 5 பேரும் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர்.

வேலையில்லாமல் சுற்றித் திரிந்த இவர்கள் மீது விலங்கு பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இவர்களுக்கு 1 லட்சம் தைவான் டொலர் அபராதம் விதிக்கப்பட்டது. நாய் மற்றும் பூனைக் கறி சாப்பிடுவது சட்டவிரோதம் எனவும் தைவான் நீதிமன்றம் தனது தீர்ப்பில் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சூடானிலிருந்து தெற்கு சூடான் பிரியுமா? ஆரம்பமாகிறது மக்கள் வாக்கெடுப்பு

## வெற்றி கிடைக்குமானால் புதியநாடு உதயம்

சூடானிலிருந்து பிரிந்து தெற்கு சூடான் தனி நாடாவதா வேண்டாமா? என்பது தொடர்பில் நடக்கும் மக்கள் கருத்தறியும் வாக்கெடுப்பு கடந்த ஞாயிறன்று ஆரம்பமாகியுள்ளது.

தெற்கு சூடான் தனிநாட்டுக்கு ஆதரவாக கருத்து வாக்கெடுப்பில் வெற்றி கிடைக்குமானால் உலகின் மிகப் புதிய நாடாக அது அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

கிறிஸ்தவர்களும் ஆபிரிக்காவின் பூர்வ மதத்தினவராகவும் அமைந்திருக்கின்ற தெற்கு சூடானிய மக்கள் இந்த வாக் கெடுப்பை மிகவும் எதிர்பார்த் திருந்தனர். அவர்களிடையே தற்போது மகிழ்ச்சியான ஒரு சூழல் காணப்படுகிறது என சர்வதேச செய்தி ஸ்தாபனங்கள் தெரிவிக்கின்றன.

இந்தக் கருத்து வாக்கெடுப்பில் தெற்கு சூடானியர்கள் தனி நாடாகப் பிரிந்து செல்லவே வாக்களிப்பார்கள் என்பதை முஸ்லிம் பெரும்பான்மை கொண்ட வட சூடானியர்கள் புரிந்துகொண்டுள்ளனர் என்று தெரிவதாக அங்குள்ள பி.பி.சி செய்தியாளர் கூறுகிறார்.

தெற்கு சூடான் தனி நாடாகப் பிரிந்த பின்னரும் இவ்விரு நாடுகள் இடையில் நாட்டின் எண்ணெய் வளங்களை பகிர்ந்து கொள்ளுதல், எல்லைகளை வகுத்துக் கொள்ளுதல், கடன் சுமையைப் பகிர்ந்து கொள்ளுதல் போன்ற பலவித சவால்கள் ஏற்படும் என்றும் தெரிகிறது.

தற்சமயம் தெற்கு சூடான் என்ற சுயாட்சிப் பிரதேசத்தின் அதிபராக இருந்து வருபவரும் ஒருங்கிணைந்த சூடானின் முதல் துணை அதிபருமான சல்வா கீர் தெற்கு சூடானின் தலைநகரமான ஜ°பாவில் கடந்த ஞாயிறன்று தனது வாக்கைப் பதிவு செய்தார்.

இந்த வாக்கெடுப்பைக் கண் காணிப்பதற்காக சூடான் வந்துள்ள ஐரோப்பிய ஒன்றியக் குழுவைச் சேர்ந்த வெரோனீக்த கெய்செர், இது குறித்துக் கருத்துத் தெரிவிக்கையில் -

"இதுவரை தான் பார்த்த வகையில் வாக்கெடுப்பு நல்ல முறையில் ஆரம்பித்துள்ளது" என்று செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

அதேநேரம் சூடானில் வாழும் தென் சூடானியர்கள் இடையில் குதூகலம் தென்படவில்லை. தெற்கு தனி நாடாகப் பிரிந்து போனால் வடகில் வாழும் தங்கள் நிலை என்னாகும் என்று இவர்கள் கவலை கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.



# குறள் சொல்லும் கதைகள் -23

## இன்பத்துப் பால்

### தேவர் உலகிலும் மேலான இன்பம்

வெகுநேரமாகக் காத்திருந்தும் வித்தியா வரவில்லை. அதனால் கஜேந்திரனுக்குப் பொறுக்க முடியாத அவதியாக இருந்தது. மூன்று நாட்களுக்குப் பின் வந்தவள் சிறிது நேரம் நின்று கதைத்திருக்கலாம் என்று நினைத்தான் கஜேந்திரன்.

"நான் அர்ச்சகாவைக் காணவில்லை. என்று துடித்தால் என்னைப் பற்றிக் கேவலமாகச் சொல்வாய், இப்ப நீ ஏன் துடிக்கிறாய். நான் தான் முடிவை அறிய வேண்டுமென்பதற்காக அவதிப்பட்டனான். நீ என்னத்திற்கு அவதிப்படுகிறாய்? நீயும் விரும்புறாய், அவளும் விரும்புறாள். வீட்டாரும் விரும்புகினை. பிறகென்ன அவதி" சிரித்தான் நகுலன். "உனக்கு இதுகளொன்றும் விளங்காது. காதலிக்க முன் அவள் விரும்புவாளோ என்ற அவதி மனதில் இருக்கும். அவள் சம்மதம் சொல்லி விட்டாள் வேலை வெட்டிகள் யாவற்றையும் ஒதுக்கித் தள்ளிவிட்டு அவளோடு நான் முழுவதும் இருக்க வேண்டும். என்ற நினைவு வரும். அப்படியான நிலை வந்த பின் அவளைத் தொட்டு அணைக்க வேண்டுமென்ற நினைவு வரும். இப்படிக் காதலிக்கத் தொடங்கினால் நினைவுகளுக்கு எல்லையே இராது. இனிப் போகப் போக உனக்கும் அது புரியும்" என்றான் கஜேந்திரன்.

"சரி வா போய்ப் பார்ப்பம்" என்றான் நகுலன்.

இருவரும், அர்ச்சகாவும் வித்தியாவும் சென்ற திசையை நோக்கிச் சென்றனர். ஒரு மணி நேரம் தேடியும், அவர்கள் இருவரையும் காணவில்லை. கஜேந்திரனுக்கு துக்கமாக இருந்தது. "இன்றைக்குக் காணா விட்டால் இரவுக்கு வித்தியாவின் வீட்டுக்குப் போறதெண்டு நினைச்சனான். பின்நேரம் போகவேணும்" என்றான் கஜேந்திரன்.

"நீ வீட்டை போனால் வித்தியாவின்ரை பெற்றோர் ஒன்றும் சொல்லாகினையே?" நகுலன் கேட்டான்.

"வித்தியாவினுடைய தகப்பன் செத்துப் போனார். தமையன்மார் மூன்று பேர் வெளிநாட்டிலை இருக்கினை வீட்டிலை வித்தியாவும் தாயும் தான் இருக்கினை. அப்பிடி இப்பிடி ஏதாவது ஒரு சாட்டுச் சொல்லிப் போறது தானே. சாட்டுக்கே பஞ்சம்" என்றான் கஜேந்திரன்.

"வித்தியாவுக்கு தகப்பன் இல்லை அர்ச்சகாவுக்கு இரும்புக் குண்டு மாதிரித் தகப்பன் இருக்கிறார். நான் எப்பிடிப் போறது" அழுவதைப் போலச் சொன்னான் நகுலன்.

"காதல் லேசானது அல்ல. இரும்புக் கோட்டைகளையும் தகர்த்தெறியும் வெடி குண்டு. நினைக்கிற எல்லாவற்றையும் லேசாகச் செய்து முடிக்கும் துணிவையும் அது கொடுக்கும். நீ கவலைப்படாதை" என்றான் கஜேந்திரன்.

"திருவிழா முடிந்தால் அவளை எப்படிச் சந்திப்பது என்பதை நினைக்கத் துக்கமாக இருக்கு" என்றான் நகுலன்.

"கவலைப்படாதே அந்தநேரம் அதுவதுக்கான வீரமான யோசனைகள் தானாக வரும். இரண்டு வருடங்களாக நான் வித்தியாவை காதலிக்கிறன். அவளுக்குப் பக்கத்தில் நின்று பேசினாலே எனக்கு மயக்கம் வரும். அவளின் மிருதுவான கைகளைத் தொட்டுப் பார்க்க வேண்டும் என்று தினமும் நினைப்பன். ஆனால் பயம் விடாது. ஒரு நாள் அவளின் வீட்டை போனனான்" என்று கூறிவிட்டுக் கண்களை மூடினான் கஜேந்திரன்.

நகுலன் அவனைப் பார்த்துக் கொண்டு நின்றான். வெகு நேரம் வரை கஜேந்திரன் தனது கண்களைத் திறக்கவில்லை. நகுலனுக்கு எரிச்சலாக இருந்தது. "வா போவம்" என்றான்.

"அருமையான கனவைக் கலைத்துப் போட்டாய். முதல் முதலாக அவளைத் தொட்ட நினைவு எனது கண்களுக்குள் தினமும் வலம் வரும். இன்று இந்த நேரம் வந்து விட்டது" என்று பெருமூச்சு விட்ட கஜேந்திரன் சிறிது நேரத்தின் பின் சொன்னான். "நான் போன நேரம் வித்தியாவின் தாய் கோயிலுக்குப் போய்விட்டா. வித்தியா என்னை உள்ளே அழைத்துச் சென்றாள். வெகுநேரம் கதைத்துக் கொண்டிருந்தேன். என்னை அறியாமல் எனது கரங்கள் வித்தியாவின் தோள்களைப் பற்றின. அந்தச் சுகமான இன்பத்தை வார்த்தைகளால் சொல்ல முடியாது. தான் காதலிக்கும் பெண்ணின் மென்மையான தோளில் சாய்ந்து தூங்குவதைப் போன்ற இன்பம் தேவருலகில் கூடக் கிடையாது" கண்களை மூடினான் கஜேந்திரன். நகுலன் எதுவும் கதைக்காமல் விசரனைப் போல் சிரிக்கும் கஜேந்திரனைப் பார்த்துக் கொண்டு நின்றான்.

**கே.வி.குணசேகரம்**


தாம்வீழ்வார் மென்தோள் துயிலின் இனிது கொல்
தாமரைக் கண்ணான் உலகு.

(குறள் - 1103)

தாமரை கண்ணனின் தேவருலகம், தான் விரும்பும் காதலியின் மென்மையான தோள்களில் சாய்ந்து தூங்குவதைவிட இனிதாகுமோ?

# சமாதான முயற்சியில் நோர்வேயின் பங்கு அசிங்கமான பிரசாரங்களை மேற்கொண்டனர் ஜே.வி.பியினர்

## விக்கிலீக்ஸ் வெளியிடும் புதிய தகவல்




(கொழும்பு)

சமாதான முயற்சிகளில் நோர்வேயின் பாத்திரம் தொடர்பாக மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) மேற்கொண்ட அசிங்கமான பிரசாரங்கள் குறித்து நோர்வே மிகவும் கவலைகொண்டிருந்ததாக விக்கிலீக்ஸினால் வெளியிடப்பட்ட அமெரிக்காவின் இரகசிய கேபிள் தகவல் பரிமாற்ற ஆவணமொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் ஜே.வி.பியை வழிக்குக் கொண்டு வருவதற்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தயங்கியதால் நிலைமை எரிச்சலூட்டியதாகவும் அப்போதைய நோர்வே தூதுவர் பிரட்ஸ்கர் தெரிவித்ததாக மேற்படி ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு எதிரான நோர்வே எதிர்ப்பு பேச்சுகள் குறித்து தானும் ஒஸ்லோ அரசாங்கமும் கொண்டிருந்த கவலை அதிகரித்து வந்ததாக பிரட்ஸ்கர் தெரிவித்திருந்ததாக அதில் கூறப்பட்டுள்ளது.

ஜே.வி.பியின் பிரசாரத்திற்கு பதிலளிப்பதற்கு இலங்கை அரசாங்கம் ஆர்வம் செலுத்தாமை குறித்து ஒஸ்லோ வெறுப்படைந்திருந்ததாகவும் விக்கிலீக்ஸினால் வெளியிடப்பட்ட ஆவணத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கிழக்கில் இடம் பெயர்ந்தோர் 138 தற்காலிக முகாம்களில்

(கொழும்பு)



இடி மின்னல் மழையுடன் கூடிய காலநிலை நாட்டின் வடக்கு, கிழக்கு, வட மத்திய மற்றும் மத்திய மாகாணங்களில் இன்றும் தொடர்வதற்கான வாய்ப்புகள் இருப்பதாக காலநிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கென நாடு முழுவதும் 138 தற்காலிக முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் குறிப்பிட்டுள்ளது.

சீரற்ற காலநிலையால் இதுவரை 9 பேர் பலியாகியுள்ளனர். இதேவேளை, மத்திய மாகாணத்தின் பல பகுதிகளில் மண் சரிவு அபாயம் காணப்படுவதால் மிகவும் அவதானத்துடன் செயற்பட வேண்டுமென மக்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

# மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டும் 6 வைத்தியசாலைகள் மூடப்பட்டன

(மட்டக்களப்பு)

காலநிலை மாற்றம் காரணமாகத் தொடர்ச்சியாக பெய்து வரும் மழையினால் ஏற்பட்டுள்ள வெள்ளநிலைமை காரணமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆறு வைத்தியசாலைகள் மூடப்பட்டுள்ளதாக கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் எம்.எஸ்.சுபைர் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்டூர், மண்டபத்தடி, மகிழவெட்டுவான், ரெட்டைகாடு, மாவடிச்சேனை உள்ளிட்ட பகுதிகளில் உள்ள வைத்தியசாலைகளே மூடப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் தெரிவித்தார்.

குறித்த வைத்தியசாலையில் இருந்த நோயாளர்கள் அனைவரும் மட்டக்களப்பு போதனாவைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் வைத்தியசாலை மூடப்பட்ட பகுதிகளில் இனங்காணப்படும் புதிய நோயாளர்களை வைத்தியசாலைகளுக்கு கொண்டுசெல்வதற்கு அம்புலன்ஸ் வண்டிகள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேநேரம் மாவட்டத்தில் தொடர்ச்சியாகப் பெய்துவரும் அடைமழை காரணமாக நோயினால் பாதிக்கப்படுவோர் எண்ணிக்கை அதிகரிக்கலாம் என்றபடியினால் மாவட்டத்தில் உள்ள அனைத்து வைத்தியசாலைகளும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாக கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் எம்.எஸ்.சுபைர் தெரிவித்தார்.

குறித்த வைத்தியசாலைகளுக்கு தேவையான மருந்துப் பொருட்கள் வரவழைக்கப்பட்டுள்ளதுடன் வைத்திய சாலை ஊழியர்களையும் தயார் நிலையில் இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# கொழும்பில் கடும் பனிமூட்டம் அன்றாட கடமைகள் பாதிப்பு!

(கொழும்பு)

கொழும்பில் நேற்று காலை வேளையில் கடும் பனிமூட்டத்துடன் கூடிய காலநிலை நிலவியது. இதனால் காலை வேளையில் வீதிகள் பனிமூட்டத்தினால் மறைந்தும் வழமையை விட காலநிலை சற்று வித்தியாசப்பட்டிருந்தது.

இதுகுறித்து எமது செய்திப் பிரிவு வளிமண்டலவியல் திணைக்களத்தின் காலநிலை அறிவிப்பாளரைத் தொடர்பு கொண்டு கேட்டபோது,

அவர் முக்கியமாகத் தெரிவித்துள்ள விடயங்கள் வருமாறு,

வளிமண்டலத்தில் ஏற்பட்டுள்ள தாழமுக்கமே பனிமூட்டத்துடன் கூடிய காலநிலைக்குக் காரணமாக உள்ளது.

நாட்டின் பல பாகங்களில் பனி மூட்டத்துடன் கூடிய காலநிலை தொடர்ந்து காணப்படும் எனவும், குறிப்பாக "வடக்கு, கிழக்கு, மத்திய, ஊவா, வடமத்திய மற்றும் மேல்மாகாணங்களில் தொடர்ந்து பனிமூட்டம் காணப்படும்"

இதேவேளை வடக்கு மற்றும் மேல்மாகாணத்தில் கடுமையான காற்று வீசும். தாழமுக்கம் காரணமாகவே சீரற்ற காலநிலை நிலவுகிறது.

# தோல்விப் பயத்தால் தேர்தலை பிரித்து வைக்கிறது அரசு-ஐ.தே.க

(கொழும்பு)



உலகக் கிண்ண போட்டிகளினால் நகர மற்றும் மாநகர சபைத் தேர்தல்களைப் பிற்போட்ட அரசு, பிரதேச சபைத் தேர்தலை மட்டும் உடனடியாக நடத்த முயலுகிறது. அனைத்துத் தேர்தலையும் ஒன்றாக நடத்த முடியாதா என ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகப்பேச்சாளர் கயந்த கருணாதிலக கேள்வியெழுப்பியுள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கேள்வியெழுப்பியுள்ளார்.

மேலும், தேர்தலில் தோல்வி அடைந்து விடுவோம் என்ற அச்சத்தினாலேயே அரசு தேர்தலைப் பிரித்து நடத்தவிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, மஹரகம நகர சபையிலும், அநுராதபுரம் மாநகர சபையிலும் 2011 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் தோற்கடிக்கப்பட்டது. இந்த வரவு செலவுத் திட்டத்துக்கு எதிராக வாக்களித்த ஆளும் தரப்பு உறுப்பினர்களுக்கு ஆளும்தரப்பில் இருந்தவாறே தேர்தலில் வேட்பு மனுத் தாக்கல் செய்ய வாய்ப்பு கிடைக்கப் போவதில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்று வெற்றிகரமாக ஆரம்பித்த ஜனாதிபதியின் இரண்டாவது பதவிக்காலமானது வலுவிழந்து செல்வதாகவும் கயந்த கருணாதிலக தெரிவித்துள்ளார்.

# கிழக்கில் பெருவெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி நிவாரண நடவடிக்கை

(கொழும்பு)


பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் உள்ள உலக உணவுத் திட்டத்தின் ஊடாகவும், அனர்த்த சேவைகள் அமைச்சினூடனும் இணைந்து மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களில் அடைமழையினாலும், பெருவெள்ளத்தினாலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்க ஏற்பாடு செய்யப்படவுள்ளதாக நிவாரண நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளும்படி பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செயலாளருக்கும் உலக உணவு திட்டப் பணிப்பாளருக்கும் வேண்டுகோள்விடுத்துள்ளதாக பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் முத்து சிவலிங்கம் தெரிவித்தார்.

மேலும் அந்தந்த மாவட்ட செயலாளர்களுக்கும் அமைச்சின் கீழ் இயங்கும் மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர்களுக்கும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு சமைத்த உணவுகளை அமைச்சின் நிதி உதவியுடன் மேற்கொள்ளும்படி பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

இதுபோன்று பதுளை, கண்டி,பொலனறுவை மாவட்டங்களுக்கும் அனர்த்த நிவாரணங்கள் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாகவும் பிரதி அமைச்சர் முத்து சிவலிங்கம் மேலும் தெரிவித்தார்.

# கட்சியைவிட்டு விலகும் எண்ணம் இல்லை எடுத்துக்கூறுகிறார் அமைச்சர் ரட்ணசிறி

(கொழும்பு)



கட்சியை விட்டு விலகுவது தொடர்பில் எந்தவொரு எதிர்க்கட்சியினருடனும் கலந்துரையாடவில்லை எனவும், பிரச்சினைகள் குறித்து தன்னை எவராலும் அமைதிப்படுத்த முடியாது எனவும் நல்லாட்சி மற்றும் உட்கட்டமைப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுக் காலை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும், என்னை நன்றாகத் தெரிந்தவர்களுக்கு நான் வதந்திகள் குறித்து கவலைப்படுவதில்லை என்பதும் நன்கு தெரியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். நகைச்சுவையாக தான் பெண்களுடன் மாத்திரம் தான் கலந்துரையாடுவதாகவும் ஆண்களுடன் கலந்துரையாடும் விதத்தில் எதுவித வர்த்தக தொடர்பும் வைத்திருப்பதில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, சிரேஸ்ட அமைச்சர் என்பது புது விடயம். அந்த அமைச்சுப் பதவிக்கு எதுவித கட்டிடங்களோ, செயலாளரோ, விசேட பணிகளோ இல்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# முகமூடியணிந்த மர்ம நபர்களினால் ஆயுத முனையில் கொள்ளை

## அம்பாறையில் பரபரப்புச் சம்பவம்

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தின் திருக்கோவில் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட விநாயகபுரத்திலுள்ள வீடொன்றில் நேற்று முன்தினம் இரவு சுமார் 5லட்சம் ரூபா பெறுமதியான நகைகள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாக திருக்கோவில் பொலிஸார் தெரிவித்தனர்.

விநாயகபுரத்தின் கிராம வீதியில் உள்ள வீடு ஒன்றுக்குள் புகுந்த முகமூடி அணிந்த ஆயுததாரிகள் நால்வர் வீட்டாரைத் துப்பாக்கி முனையில் அச்சுறுத்திவிட்டு நகைகளைக் கொள்ளயடித்துள்ளதாகப் புகாரிடப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக திருக்கோவில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

இதேவேளை இக்குழுவினர் திருக்கோவில் உப தபால கந்தையும் உடைத்துக் கொள்ளையடிக்க முயற்சித்ததாகவும் பின்னர் ஊர்மக்களைக் கண்டு அங்கிருந்து தப்பியோடிவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# படகு கவிழ்ந்ததில் குடும்பஸ்தர் மரணம்

கல்முனை நற்பிட்டிமுனைப் பகுதியில் ஏற்பட்டுள்ள வெள்ளப் பெருக்கில் சிக்கியுள்ள மக்களைக் காப்பாற்றுவதற்கு தோணியில் சென்று ஆட்களை ஏற்றிக்கொண்டு திரும்பிவரும் போது படகு கவிழ்ந்ததினால் நான்கு பிள்ளைகளின் தந்தை ஒருவர் பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.வெள்ளப் பெருக்கில் சிக்கியுள்ள மக்களுக்கு உதவி செய்யவெனச்சென்ற போது கடந்த 9ஆம் திகதி மாலை 4 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.கல்முனை மணற்சேனையை வசிப்பிடமாகக் கொண்ட சிந்தாத்துரை கனகசுந்தரம்(மேகலிங்கம்-52 வயது) என்பவரே இவ்விபத்தில் உயிரிழந்தவராவார்.

# நிரந்தர அரசியல் தீர்வைப் பெற்றுக்கொடுக்கும் கூட்டு முயற்சியே தமிழ்க் கட்சிகளின் அரங்கம்

## இதுவே அதன் இலக்கு என்கிறார் அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா



சூரியப் பொங்கல் தேசிய விழாவாகவும் எமது மக்களின் முன்னேற்றத்திற்கும் அபிவிருத்திக்குமான விழாவாகவும் அமைய வேண்டுமென ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா அவர்கள் தெரிவித்தார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்கள் யாழ்ப்பாணம் வருகை தந்து சூரியப் பொங்கல் விழாவில் கலந்து கொள்ளும் நிகழ்வில் மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னேற்பாடுகள் தொடர்பான கலந்துரையாடல் யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று நடைபெற்றபோது அங்கு உரையாற்றிய அமைச்சர் அவர்கள் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்; தமிழ்க் கட்சிகளின் அரங்கம் ஒரு தேர்தல் கூட்டோ அரசியல் கூட்டோ அல்ல என்பதுடன், அரங்கத்திலிருந்து ஈ.பி.டி.பி. விலகியுள்ளதாக உண்மைக்குப் புறம்பான செய்திகளையும் பத்திரிகைகள் வெளியிட்டுள்ளன.

நொந்து போன எமது மக்களுக்கு இவ்வாறான செய்திகள் குழப்பத்தையும், நம்பிக்கையீனத்தையும் ஏற்படுத்துகின்றன.

தமிழ் மக்களுக்கு நிரந்தர அரசியல் தீர்வைப் பெற்றுக் கொடுக்கும் கூட்டு முயற்சியே தமிழ்க் கட்சிகளின் அரங்கம் என்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் தெரிவித்தார்.

ஆகவே பத்திரிகைகள் மக்களுக்கு தைரியத்தையும் நம்பிக்கையையும் ஏற்படுத்தக் கூடிய வகையில் செய்திகளை வெளியிட வேண்டும்.

யாழ்ப்பாணத்தில் கடந்த நாட்களில் நடைபெற்ற சில அசம்பாவிதங்களைச் சுட்டிக் காட்டிய அமைச்சர் அவர்கள், எதிர்வரும் காலங்களில் இவ்வாறான வன்முறைகளோ சம்பவங்களோ நிகழாத முறையில் தடுக்கப்பட வேண்டும் என்பதுடன், அதற்கு தமது பூரண ஒத்துழைப்பும், ஒத்தாசையும் என்றென்றும் கிடைக்கும் எனவும் உறுதிப்படத் தெரிவித்துள்ளார்.

ஈ.பி.டி.பி.யின் பெயரைப் பயன்படுத்தி மக்கள் விரோத செயல்களில் ஈடுபடுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் அதேவேளை, அவர்கள் தண்டனைக்கும் உள்ளாகுவர் என்றும் அமைச்சர் அவர்கள் மேலும் தெரிவித்தார்.

மாவட்ட அரச செயலக கேட்போர் கூடத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்த கலந்துரையாடலில்-

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்கள் யாழ்ப்பாணத்திற்கு வருகை தரும் நிகழ்வில் மாவட்டத்தைச் சேர்ந்த 100 சிவாச்சாரியர்களும், 100 தவில் -நாதஸ்வரக் கலைஞர்களும், தெரிவு செய்யப்பட்ட 15 விவசாயிகளும் தேசிய மட்டத்தில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்ட பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் வீரர்களும் கௌரவிக்கப்படும் அதேவேளை, 2010 - 2011 ஆம் ஆண்டுகளில் பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக் கொண்ட50 மாணவர்களுக்கு மடிக்கணினிகள் வழங்கப்படவுள்ளதுடன் 'ஈழத்து சௌந்தர ராஜன்' என அழைக்கப்படும் அருள் ஜோதியும் கௌரவிக்கப்பட உள்ளதாகவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் தெரிவித்தார்.

அத்துடன் வசாவிளான் மத்திய மகா வித்தியாலயத்திற்கென புனரமைக்கப்பட்டு வரும் புதிய கட்டடத்தை ஜனாதிபதி திறந்து வைக்கவுள்ளதாகவும், பாடசாலைக்கு இலங்கை மின்சாரசபை மூலம் மின்சாரம் கிடைக்கவுள்ள அதே வேளை, பாடசாலையின் தேவைக்கென 100 கதிரைகளை வழங்கவும் மாவட்டச் செயலகம் முன்வந்துள்ளது.

துரையப்பா விளையாட்டு அரங்கில் நடைபெறும் இப்பொங்கல் விழாவில் மேடை அலங்காரம் உள்ளிட்ட அலங்காரங்கள், போக்குவரத்து, மின்சாரம், நீர் விநியோகம் மற்றும் வாகனத் தரிப்பிடம் மலசல கூடம் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டன. இக்கலந்துரையாடலில் ஈ.பி.டி.பி. யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான முருகேசு சந்திரகுமார் சில்வேஸ்த்திரி அலென்டின் (உதயன்) யாழ். அரச அதிபர் இமெல்டா சுகுமார், யாழ். மாநகர முதல்வர் யோகேஸ்வரி பற்குணராஜா பிரதேச, செயலாளர்கள், பிரதேச சபை செயலாளர்கள் மற்றும் அரச திணைக்களங்களின் துறைசார் உயரதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

### வடக்கின் துரித...

அதிகாரசபையின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இத்திட்டத்தின்படி மாங்குளம், வவுனியா, கிளிநொச்சி, சாவகச்சேரி போன்ற நகரங்களே விரைவில் பாதுகாப்புச் செயலர் கோத்தாபய ராஜபக்ஷவின் கண்காணிப்பில் கொண்டு வரப்படவுள்ளன. பாதுகாப்பு அமைச்சின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள நகர அபிவிருத்தி அதிகாரசபை இந்த நகரங்களைப் பொறுப்பேற்கவுள்ளது.

ஏற்கனவே யாழ்ப்பாண மாநகரசபையையும் நகர அபிவிருத்தி அதிகார சபை பொறுப்பேற்றுள்ளதுடன், அங்கு கட்டுமானப் பணிகளை மேற்கொள்வதானாலும், சொத்துக்களை விற்பனை செய்வதானாலும் தமது அனுமதியைப் பெற வேண்டும் என்ற பிரமாணங்கள் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறன.

இதன் அடுத்த கட்டமாக வடக்கிலுள்ள முக்கிய நகரங்கள் அனைத்தையும் பாதுகாப்பு அமைச்சின் நேரடிக் கவனிப்பின் [illegible] கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நகரங்களை அபிவிருத்தி செய்யும் நோக்கிலேயே இப்புதிய நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக கூறப்பட்டிருக்கிறது எனினும், நாட்டின் பிற நகரங்களில் செலுத்தப்படாத கவனத்தை வடக்கிலுள்ள நகரங்கள் மீது மட்டும் நகர அபிவிருத்தி அதிகார சபை அதிக ஆர்வம் செலுத்துவதாக அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

உள்ளூராட்சி சபைகளுக்குத் தேர்தல்கள் நடத்தப்படவுள்ள இந்தநிலையில், புதிதாகத் தெரிவு செய்யப்படும் உள்ளூராட்சி சபைகளின் சுதந்திரமான செயற்பாடுகளுக்கு மட்டுப்பாடு ஏற்படுத்தும் வகையிலும், இந்த நகரங்களின் மீது அரசின் கட்டுப்பாட்டையும் நேரடிக் கண்காணிப்பையும் மேற்கொள்ளும் வகையிலுமே இந்த முடிவு எடுக்கப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது.

### யாழ். குடாவிற்கு..

சம்மேளனத்தின் ஏற்பாட்டில் மீள் குடியேற்ற அமைச்சின் அனுமதியுடன் மீள் குடியேற்றத்திற்காக யாழ். வந்து சேர்ந்துள்ளதாக முஸ்லிம் சம்மேளனத்தின் உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

மேலும் இக்குடும்பங்களுக்கான பதிவு நடவடிக்கைகள் தற்சமயம் நடை பெற்றுவருவதாகவும், வந்த குடும்பங்களில் 50 வீதமானவை சொந்தக்காணியுள்ள குடும்பங்களாகவும் மிகுதியான குடும்பங்கள் சொந்தக்காணியற்ற குடும்பங்கள் எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை யாழ். முஸ்லிம்களின் மீள் குடியமர்வுக்காக யாழ் மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டாசுகுமார் முன்னின்று செயற்படுவதாகவும், இக்குடும்பங்களையும் இந்திய அரசின் வீடமைப்புத்திட்டத்திற்குள் உள்வாங்கும்படியும் சம்பந்தப்பட்ட பிரதேச செயலரிடம் பணித்துள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

அத்துடன் மீள்குடியேற்ற அமைச்சின் 5000 ரூபா கொடுப்பனவும், 604 யாழ். முஸ்லிம் குடும்பங்களுக்கு வழங்கப்படவுள்ளதாகவும் யூ.என்.ஏச்.சி.ஆர். மற்றும் உலக உணவுத்திட்டம் ஆகியவற்றின் உலர் உணவு மற்றும் உணவல்லாப்பொருட்கள் என்பனவும் இக்குடும்பங்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (பா)

### யாழ். குற்றச்செயல்..

படவுள்ளதாகவும் யாழ் பொலிஸ அத்தியட்சகர் நெவில்பத்மதேவ அறிவித்துள்ளார்.

யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்ற விசேட கூட்டத்தின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இக்கூட்டத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ். மாவட்ட அரசாங்க அதிபர், பிரதேச செயலகர்கள், ஆகிய பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

தற்சமயம் யாழ்ப்பாணத்தில் குற்றச்செயல்கள் அதிகரித்துள்ள காரணத்தினால், இரவு பத்து மணிக்குப் பின்னர் பொது மக்களை வீதிகளில் நடமாட வேண்டாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த நேரத்துக்குப் பின்னர் வீதிகளில் நடமாடுபவர்கள் தங்களை உரியமுறையில் அடையாளப்படுத்த வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ்வாறு இல்லாத பட்சத்தில் அவர்களை கைது செய்ய முடியும் என கூறப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்டவர்களை மூன்று தினங்களுக்கு தடுப்புக் காவலில் வைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



யாழ். நகர வர்த்தகர்களின் வசதிகளினை மேம்படுத்தல் தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா யாழ். மாநகரசபையில் வர்த்தகர்களுடனான சந்திப்பின் போது எடுக்கப்பட்ட படம் (26)

### வாகனங்களுக்கு...

கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது.

இதனையடுத்து யாழ். மாவட்டத்திற்கான பிரதி பொலிஸ்மா அதிபருடன் தொடர்பு கொண்ட அமைச்சர் அவர்கள் தை மாதம் 31ம் திகதிவரையில் அவ்வாறு வாகன வரிகளைச் செலுத்தி பற்றுச்சீட்டுக்களைப் பெறாதவர்கள் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்காதிருக்க நடவடிக்கை எடுத்துள்ளார்.

பிரதேச செயலகங்களில் ஒரு நாளைக்கு குறிப்பிட்டளவு வாகனங்களுக்கான வரிகளை மாத்திரமே பெற்று பற்றுச்சீட்டுக்களை வழங்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் என்பதால் இதில் தாமதங்கள் ஏற்பட்டுள்ளமை தொடர்பில் பிரதி பொலிஸ்மா அதிபரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

மாகாண சபை நிர்வாகம் இல்லாததன் காரணமாகவே இப்பகுதியில் இவ்வாறான நெருக்கடிகள் தோன்றியுள்ளது. ஏனைய மாவட்டங்களில் கடந்த வருட இறுதிக் காலப்பகுதிகளிலேயே வாகனங்களுக்கான வரி ஏற்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு டிசெம்பர் மாதம் 31 திகதிக்குள் அந்நடவடிக்கைகள் முழுமை பெற்றுள்ளன.

இந்நிலையில் யாழ் மாவட்டத்திலுள்ள வாகன உரிமையாளர்கள் இம்மாத இறுதிக்குள் தங்களது பிரதேச செயலகங்களில் உரிய வாகன வரிகளைச் செலுத்தி அதற்கான பற்றுச் சீட்டுக்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

### முறிந்துபோன...

இதனை ஜப்பானிய சமாதான தூதுவர் அகாசி மற்றும் ஜப்பானின் இலங்கைக்கான தூதுவர் சிச்சிரோ ஒட்ஸ்சுகா ஆகியோரிடம் கூறினார்.

இதனை அன்ரன் பாலசிங்கம் கூறும்போது, விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனும் கூடவே இருந்தார்.

கிளிநொச்சியில் நடைபெற்ற கூட்டத்தின்போது ஜப்பா னின் சமாதானத் தூதுவர் அகாசி, புலிகளை சமாதான பேச்சுக்கு திரும்புமாறும் டோக்கியோவில் ஜூனில் நடக்கவிருந்த நன்கொடையாளர் மாநாட்டில் கலந்துகொள் ளும்படியும் வற்புறுத்தினார். ஆனால், பிரபாகரன் பதிலேதும் கூறாமலே இருந்துவிட்டார்.

அகாசி மனித உரிமைகள் விடயத்திலும் பிரபாகரனுக்கு அழுத்தம் கொடுத்தார். அத்துடன் வடக்கு, கிழக்கின் மனிதாபிமானம் மற்றும் புனர்வாழ்வுக்கான உபகுழுவிலிருந்து வெளியேறியிருந்த புலிகளை மீண்டும் சேருமாறு பிரபாக ரனுக்கு கொடுத்த அழுத்தமும் பலனளிக்கவில்லை. கூட்டத் தின் முடிவில் பிரபாகரன் அகாசிக்கே தமிழீழத்தின் வரைபட சின்னத்தை கொடுத்தார் என்றும் விக்கிலீக்ஸ் வெளியிட்டிருக்கும் அதி உயர் இராஜதந்திர தகவல் பொதியில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

### புலிகளின்...

மூலம் புலிகள் தமது நடவடிக்கைகளுக்காக பெருமளவு பணத்தைச் சம்பாதித்துக் கொண்டதாகவும் அமைச்சர் பீரிஸ் குறிப்பிட்டுள்ளார்.

புலிகள் தோற்கடிக்கப்பட்ட பின்னர், வெளிநாடுகளில் உள்ள அவர்களது ஆதரவாளர்கள் இந்த சட்டவிரோத வர்த்தகத்தில் தொடர்ந்தும் ஈடுபட்டு வருகின்றனர். இலங்கையின் பாதுகாப்பு நிலைமைகள் வழமைக்கு திரும்பி உள்ள நிலையிலும், சிலர் பல்வேறு காரணங்களைக் கூறி வெளிநாடுகளுக்கு குடிபெயர முயற்சித்து வருகின்றனர். இது அந்த நாடுகளுக்கு இடையூறாக இருப்பதுடன் இலங்கையின் நற்பெயருக்கும் பாதிப்பை ஏற்படுத்துகிறது எனவும் வெளிவிவகார அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# அரசு - கூட்டமைப்பு தீர்வு குறித்து பேச்சு

## கொழும்பில் நேற்று ஆரம்பம்

(கொழும்பு)

அரசுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப புக்கும் இடையிலான பேச்சுக்கள் நேற்று சுமுகமான முறையில் இடம்பெற்றது. தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக் காண்பது குறித்து இரு தரப்பிலும் நியமிக்கப்பட்ட குழுவினருக்கிடையில் இப்பேச்சுக்கள் நடைபெற்றன.


இச்சந்திப்பில் அரச தரப்பில் அமைச் சர்களான ரட்ணசிறி விக்கிரமநாயக்க, நிமால் சிறிபால டி சில்வா மற்றும் ஜீ.எல்.பீரீஸ் ஆகியோரும், தமிழ்த் தேசிய கூட்டமைப்பு சார்பாக நாடாளு மன்ற உறுப்பினர்களான மாவை சேனாதி ராஜா, சுரேஷ் பிரேமசந்திரன் மற்றும் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதுபோன்ற சந்திப்புக்களை தொடர்ந்து நடத்துவதற்கும் இதன் போது இணக்கம் காணப்பட்டது என அவர் குறிப்பிட்டார்.

இது ஆரம்ப சுற்றுப் பேச்சுவாத்தை யாகும். இதனை மேலும் முன்னெடுக்க வுள்ளோம் என்றும் அவர் தெரிவித்தார்.

அரசியல் தீர்வு தொடர்பில் அர சாங்கமும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பும் பேச்சு நடத்த வேண்டும் என இந்திய அரசாங்கம் ஏற்கனவே பல தடவைகள் வலியுறுத்தியிருந்தது.

நேற்றைய பேச்சுவார்த்தையின் தொடர்ச்சியாக எதிர்வரும் 24 ஆம் திகதி அடுத்த கட்டப் பேச்சுக்கள் இடம்பெற விருக்கிறது.



யாழ். வர்த்தக சமூகப் பிரதிநிதிகளை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கொழும்பு அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடுவதைக் காணலாம்.

# அவுஸ்ரேலியாவுக்குத் தேயிலையை நன்கொடையாக கொடுக்கும் இலங்கை

CEYLON TEA
Symbol of Quality

(கொழும்பு)

அவுஸ்ரேலியாவின் வட கிழக்கில் வெள்ளத்தால் தொடர்ந்து பாதிப்புக்குள்ளாகி வருகின்ற மக்களுக்கு வெள்ள நிவாரண நன்கொடை ஒன்றை இலங்கை அரசாங்கம் வழங்கியுள்ளது.

இலங்கையின் மிகப் பிரபலமான ஏற்றுமதிப் பொருளான தேயிலையை அவுஸ்ரேலியாவுக்கு இலங்கை வழங்கியுள்ளது.

அவுஸ்ரேலியாவுக்கு தங்களது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதற்காக இலங்கையில் விளைந்த தேயிலையை அந் நாட்டுக்கு நிவாரண நன்கொடையாக வழங்குவதாக இலங்கையின் வெளியுறவுச் செயலர் ரொமேஷ் ஜெயசிங்க கூறியுள்ளார்.

2004 சுனாமியின் போதும், தற்போது இலங்கையில் கண்ணிவெடிகள் அகற்றப்படுகின்ற பணிகளிலும் அவுஸ்ரேலியா இலங்கைக்கு உதவியுள்ளதை அவர் நினைவுகூர்ந்தார்.

கொழும்பின் அரசாங்கமும் டில்மா என்ற இலங்கையின் முன்னணி தேயிலை உற்பத்தி நிறுவனமும் கூட்டாக இந்த நிவாரண நன்கொடையை அவுஸ ரேலியாவுக்கு வழங்குகின்றன.

இரண்டரை லட்சம் கோப்பைகளுக்கு தேநீர் போடுவதற்குத் தேவையான தேயிலையை இலங்கை வழங்கியுள்ளது.

அவுஸ்ரேலியாவில் உள்ள தில்மா நிறுவனத் தேயிலைச் சேமிப்புக் கிடங்குகளில் இருந்து குவின்ஸ்லாந்து மாகாணத்துக்கு இத்தேயிலை நேரடியாக அனுப்பி வைக்கப்படும் எனத் தெரிகிறது.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்படும் உணவுப் பொதிகளில் இந்தத் தேயிலையையும் சேர்த்து வழங்கப்படும் என கொழும்பில் உள்ள அவுஸ் ரேலிய தூதரகத்தின் தற்காலிக உயர்ஸ்தானிகரான சோ.்.பியா மெக்கிண்டயர் கூறினார்.

இலங்கையின் இந்த நற் செய்கையை மிகவும் மெச்சுவதாக அவர் தெரிவித்தார்.


# நாட்டின் கரையோரப் பகுதிகளில் கடல் கொந்தளிப்பு

(கொழும்பு)

இலங்கையைச் சுற்றியுள்ள கடற்கரையோரப் பிரதேசங்களில் 20 தொடக்கம் 40 கிலோ மீற்றர் வேகத்தில் கடல் கொந் தளிப்பு நிலவுகிறது என வளி மண்டலவியல் திணைக்களத் தின் பேச்சாளர் நேற்றுத் தெரி வித்தார்.

தாழமுக்கம் காரணமாக சீரற்ற காலநிலை தொடர்ந்தும் எதிர் பார்க்கப்படும் எனத் தெரிவிக் கப்படுகிறது.

வடக்கு மற்றும் கிழக்குப் பிரதேசங்களில் கடல் கொந்தளிப்பு நிலவும் என வளிமண்டலவியல் திணைக்களம் மேலும் தெரிவித்தது.



# கட்சியின் மறுசீரமைப்புக்குள் குறுக்கிடுகிறது உள்ளூராட்சி தேர்தல்

## ஐ.தே.கட்சிக்கு நேர்ந்த தர்மசங்கடம்

(கொழும்பு)

ஐக்கிய தேசிய கட்சியின் செயற்குழு கூட்டம் எதிர்வரும் 13 ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெறவுள்ள நிலையில், இக் கூட்டத்தில் சீர்த்திருத்தம் பற்றிய முக்கிய தீர்மானங்கள் எடுக்கப் படவுள்ளன.

இதேவேளை, கட்சியின் சீர்த்திருத்தங்களை வலியுறுத்தி வந்த சஜித் பிரேமதாஸ, கட்சியானது உள்ளூராட்சி மன்றத் தேர்தல் களுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்று கூறியுள்ளார்.

கட்சியின் சீர்த்திருத்தங்களை உள்ளூராட்சி தேர்தல் முடியும் வரை தாமதப்படுத்த வேண்டும் என சிலரும் கட்சியின் சீர்த்திருத்தம் தேர்தலின் முன் மேற்கொள்ளப்பட வேண்டும் என வேறு சிலரும் கருதுகின்றனர்.

இதுபற்றிய தீர்மானம் எதிர்வரும் வியாழக்கிழமை ஒருமனதாக எடுக்கப்படும் என கட்சியின் பேச்சாளரும் காலி மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினருமான கயந்த கருணாதிலக்க தெரிவித்துள்ளார்.

# மரண அறிவித்தல்

## தெய்வேந்திரன் விஜயன்



சண்முகம் வீதி, சங்கத்தானை, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட **செல்வன். தெய்வேந்திரன் விஜயன** 10.01.2011 நேற்று திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் சின்னத்தம்பி தெய் வேந்திரன் அவர்களின் அன்புப் புதல்வனாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.01.2011) மதியம் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப் பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(இ) தகவல் : குடும்பத்தினர்.

# இலங்கை புலனாய்வு அதிகாரிகளுக்கு...

நிபுணர்களை இரு நாடு களுக்கும் இடையில் பரிமாறிக் கொள்வது உட்பட, இரு நாடு களுக்கும் இடையிலான பொரு ளாதார ஒத்துழைப்பை முன் னேற்ற வேண்டும் எனவும் பாகிஸ்தான் ஜனாதிபதி வலி யுறுத்தியுள்ளார்.

இலங்கையின் தேயிலையை பாகிஸ்தானுக்கு மேலும் அதிகமாக ஏற்றுமதி செய்ய வேண்டும் எனக்கூறிய அவர், இரு தரப்புக்கும் இடையிலான வர்த்தகம் உள்நாட்டு நாணயத்தில் மேற்கொள்ளப்பட வேண்டும் எனக் கூறினார்.

இச்சந்திப்பில் சபாநாயகர் சமல் ராஜபக்ஷ உரையாற்றுகையில், பயங்கரவாதத்தை முறியடிப்பதற்கு பாகிஸ்தான் அரசாங்கம் மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு இலங்கை முழுமையாக ஆதரவளிப்பதாக தெரிவித்தார்.

பயங்கரவாதத்திற்கு எதிராகப் போரிடுவதில் இலங்கை இராணுவத்திற்கு உதவியமைகாக பாகிஸ்தான் அரசாங்கத்திற்கு அவர் நன்றி தெரிவித்தார்.

பாகிஸ்தானுடன் சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் செய்த முதலாவது நாடு இலங்கை என்பது குறிப்பிடத்தக்கது. இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகத்தின் பெறுமதி 400 மில்லியன் டொலராக அதிகரித்துள்ளது. இதை 2 பில்லியன் டொலர்களாக அதிகரிப்பதற்கு இரு நாடுகளும் இலக்கு நிர்ணயித்துள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.

# உடன் தேவை

01) பத்திரிகை விநியோகம் செய்பவர்கள்
02) பணம் சேகரிப்பவர்கள்

இப்பணிநிலைகளுக்கு சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளவர்களும், சொந்தமாக மோட்டார் சைக்கிள் வைத்திருப்போரும், நல்ல தேக. ஆரோக்கியம் உடையவர்களும், யாழ். குடாநாட்டின் அனைத்து இடங்களுக்கும் சென்று பணியாற்றக்கூடியவர்களாகவும் இருத்தல் வேண்டும். பொருத்தமானவர்கள் அலுவலக நேரத்தில் நேரில் சமுகம்தரவும்.

**தினமுரசு,**
**373, பிரதான வீதி, பஸ்தியன் சந்தி, யாழ்ப்பாணம்.**

யாழ்.மாவட்ட மக்களுக்கு
SEC
ஷாலோம்
SHALOM
உங்கள் கனவு இல்லங்களையும் ஏனைய கட்டிடங்களையும் மாவட்டத்தின் எந்தப் பகுதியிலும் அழகுற நிர்மாணித்துக்கொள்ள SHALOM நிர்மாணப் பொறியியலாளர்கள் உறுதியான உத்தரவாதமளிக்கிறார்கள்.
குறித்த தவணைக்குள் .... குறைந்த செலவில்.... நவீன முறையில்...
SHALOM வழங்கும் நற்செய்தி...!
வீடுகள் கட்டிடங்கள் அனைத்தையும் அமைத்துக்கொள்ளவும் மாபிள் - ரெறாசோ வேலைகளை நேர்த்தியாக அழகுற செய்துகொள்ளவும் நம்பிக்கையுடன் தொடர்பு கொள்ளுங்கள்
SHALOM
20/1, 2வது ஒழுங்கை,
பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.
(C/357)
தொலைபேசி: 0217901798 - 0771044861
தீவகத்தில்
SHALOM,
சிற்பன வீதி,
வங்களாவடி,
வேலணை.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 ஜனவரி 11 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.